# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 13 செவ்வாய்க்கிழமை (29-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily ஒளி: 235


## கதிர்காமர் கூறுகின்றார்:

# பேச்சுக்கான கதவு திறந்தே உள்ளது!

## தரைவழிப் பாதையை திறப்பதிலும் விடாப்பிடி!



அமைச்சர் கதிர்காமர்

புதுடில்லி, ஜூலை 29

சமாதானப் பேச்சுக்கான கதவு திறந்தே உள்ளது. அதேசமயம் வடக்குக்கான தரைப் பாதையைத் திறக்கும் நடவடிக்கைகளிலும் அரசு முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

—இவ்வாறு கூறியிருக்கின்றார் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

இலங்கை — இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி இன்றுடன் பத்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

அதனை ஒட்டி பி. ரி. ஐ. செய்தி நிறுவனத்துக்கு அமைச்சர் கதிர்காமர் பேட்டியளித்தார். அப்பேட்டியை 'இந்து' நாளிதழ்வெளியிட்டுள்ளது. அப்பேட்டியில் அமைச்சர் கதிர்காமர் மேலும் கூறியிருப்பதாவது:-

பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான நம்பிக்கைத் தன்மையுடைய — அணுகு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விமான சேவை மீண்டும் இன்று ஆரம்பமாகும்?

இடைநிறுத்தப்பட்டிருந்த கொழும்பு — பலாலிக்கான பயணிகள் விமான சேவை அனேகமாக இன்று மீண்டும் ஆரம்பமாகும் என கொழும்பில் நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

இன்று விமானத்தில் பயணம் செய்வதற்காக ஒரு தொகுதியினருக்கு விமானச் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

எனினும் —

விமான சேவை நடைபெறுவதை ஊர்ஜிதப்படுத்தும் தகவல்கள் ஏதும் நேற்று மாலை வரை கிடைக்கவில்லை என யாழ். சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

### கல்விச் சீர்திருத்தத்தைக் கண்டித்து

## தெற்கில் எதிர்ப்பு இயக்கம் நடத்த மாணவரை தூண்டிய 6பேர் கைது!

கொழும்பு, ஜூலை 29

அரசாங்கம் வெளியிட்டுள்ள கல்விச் சீர்திருத்த யோசனைகளுக்கு எதிராக எதிர்ப்பு இயக்கம் ஒன்றை நடத்த பாடசாலை மாணவர்களைத் தூண்டிய குற்றச்சாட்டின் பேரில் மாத்தளையில் ஆறு பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப நபர்கள் ஆறு பேரும் மாத்தளை சென் தோமஸ் கல்லூரி மாணவர்களை எதிர்ப்பு இயக்கம் ஒன்றில் ஈடுபடுத்த முயற்சித்தனர் என்றும் —

கல்விச் சீர்திருத்தக் கொள்கைக்கு எதிரான சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் என்பனவற்றுடன் பாடசாலைச் சூழலில் நடமாடிய வேளை இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை உத்தேச கல்விச் சீர்திருத்த யோசனைகள் பற்றி தவறான பிர

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 16 மீனவர்கள் நேற்று விடுவிப்பு

சென்னை, ஜூலை 29

இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்களில் 16பேர் நேற்று கச்சதீவுக்கு அப்பால் நடுக்கடலில் வைத்து விடுவிக்கப்பட்டனர் என தமிழ்நாடு அரசுச் செய்தி தெரிவித்தது. (ஐ-10)

# இந்திய மீனவர்கள் கொலை செய்யப்படுவதை கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்!

### அ. தி. மு. க. - ம. தி. மு. க. - ஜனதாக்கட்சி இணைந்து நடத்தின

சென்னை, ஜூலை 29

கச்சதீவுக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் இலங்கைப் படைகளால் கொல்லப்படுவதாகத் தெரிவித்து அதைக் கண்டித்து சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்பாக நேற்றுப் பெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் நான்காயிரம் பேர் கலந்து கொண்டனர்.

அ.தி.மு.க., ம.தி.மு.க., ஜனதா கட்சி, அகில இந்திய போர்வேட் புளொக், தமிழக விவசாயிகள் — தொழிலாளர் கட்சி, இந்தியக் குடியரசுக் கட்சி, உழைப்பாளர் கட்சி, தேசிய மீனவர் சங்கம் ஆகியவை இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை கூட்டாக ஏற்பாடு செய்திருந்தனர்.

''இந்திய மீனவர்களைத் தொடர்ந்து சுட்டுத் தள்ளும் இலங்கை அரசின் செயல் கண்டு இந்திய மக்கள் வெறுத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கைப் படையினருக்கான

## அமெரிக்க இராணுவப் பயிற்சி உடன் நிறுத்தப்பட வேண்டும்

### ஜோசப் பராராஜசிங்கம் கோரிக்கை

வாஷிங்டன், ஜூலை 29

''இலங்கை இராணுவத்திற்கு அமெரிக்க விசேட அதிரடிப்படையான 'கிறீன் பரேட்' அமைப்பால் வழங்கப்படும் பயிற்சிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.''

— இவ்வாறு அமெரிக்க அரசிடம் கோரியிருக்கின்றார் மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம்.

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் அழைப்பின் பேரில் மூன்று வார விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ள ஜோசெப் பரராஜசிங்கம் அங்கு அமெரிக்க ராஜாங்க அமைச்சின் கிழக்கு காரியாலயத்துக்கான பணிப்பாளர் ஸ்ரீபன் ஆர்மேனைச் சந்தித்தபோது மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இச் சந்திப்பின் போது வடக்குக் கிழக்கில் கடந்த 10 ஆண்டுகளாக நடைபெற்று வரும் போரினால் ஏற்பட்டுள்ள மக்கள் அழிவு, சொத்துக்களின் அழிவு ஆகியவை பற்றிய புள்ளி விவரங்களை அவர் கையளித்தார்.

இலங்கையில் இடம்பெற்று வரும் போர் உடனடியாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மீனவர் மீதான தாக்குதல்களில் படை சம்பந்தப்படவில்லையாம்!

### புலிகளைக் குற்றஞ்சாட்டுகிறார் கதிர்காமர்

கொழும்பு, ஜூலை 29

அண்மையில் இந்திய மீனவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல் சம்பவங்களில் இலங்கை விமானப்படையினரோ கடற்படையினரோ சம்பந்தப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் நரேஷ்வர் தயாளுக்கு அமைச்சர் கதிர்காமர் விளக்கமளித்துள்ளார். இலங்கைப் படையினர் எவருமே இச்சம்பவங்களில் சம்பந்தப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பயணிகள் கப்பல் சேவை விரைவில் ஆரம்பமாகும் சாத்தியம் இல்லை

திருகோணமலை, ஜூலை 29

திருகோணமலைக்கும், காங்கேசன் துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை அடுத்த ஒரு வார காலத்துக்குள் மீண்டும் ஆரம்பமாவதற்கான சாத்தியங்கள் எதுவும் தென்படவில்லை என்று எமது திருகோணமலை செய்தியாளர் நேற்றிரவு தெரிவித்தார்.

பயணிகள் சேவையில் ஈடுபடுத்துவதற்கென வாடகைக்கு அமர்த்தப்பட்ட ''குட்வில் கைட்'' என்ற கப்பல் பயணிகள் பயணம் செய்வதற்குரிய அடிப்படை வசதிகளைக் கொண்டிருக்கவில்லை. அதில் போதியளவு காற்றோட்ட வசதிகள் இல்லை. அத்துடன் கப்பலின் ஜன்னல்கள் கடல் நீர் மட்டத்தில் இருந்து ஒரு சில அடி உயரத்திலேயே அமைந்துள்ளன. அவற்றினூடாக கடல் நீர் உட்புகாமல் தடுக்கும் வசதிகளும் கப்பலில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் வெடிச் சத்தம் கேட்டதும் அது அமுக்க வெடிஎன நினைத்தேன்

## இளவாலை பஸ்ஸில் சென்ற கோப்ரல் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

''இளவாலை பஸ் தரிப்பிடத்தில் நின்ற பயணிகளை ஏற்றிக் கொண்டு பஸ் புறப்பட்டு 5 நிமிடம் தான் ஆகியிருக்கும். பெரியவெடிச்சத்தம் ஒன்று கேட்டது. சன நடமாட்டமற்ற அந்தப் பிரதேசத்திலிருந்தே சத்தம் வந்தது. அந்தச் சத்தத்துடன் பஸ் வீதியின் இடது பக்கமாகப் போய் நின்றது. பஸ் அமுக்க வெடியில் சிக்கி விட்டதாகவே நான் நினைத்தேன். சத்தம் கேட்ட உடன் கீழே இறங்கி பல தடவைகள் சுட்டேன். பின்னர் பஸ்ஸினுள் ஏறிப் பார்த்த போது அங்கு பஸ் சாரதியும் மூன்று இராணுவத்தினரும் இறந்து கிடந்ததைக் கண்டேன்''

கடந்த மாதம் 3 ஆம் திகதி படையினரின் பாதுகாப்புடன் பொது மக்களை ஏற்றிச் சென்ற போக்குவரத்து பஸ் ஒன்று மாதகலுக்கும் இளவாலைக்கும் இடையில் கிளைமோர் கண்ணியில் சிக்கியது தெரிந்ததே. அந்த பஸ்ஸில் பயணஞ் செய்த லாண்ட்ஸ் கோப்ரல் எதிரிசிங்கே தேவலாஹே ஹேமரத்தின (வயது 30) இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் மரண விசாரணையில் சாட்சியமளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நேற்று யாழ். நீதிமன்றத்தில் நீதிபதி ஏ. என். இராமச்சந்திரன் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் லாண்ட்ஸ் கோப்ரல் எதிரிசிங்க மேலும் தெரிவித்ததாவது:-

அன்றைய தினம் நடந்தவை எனக்கு நல்ல ஞாபகமாக இருக்கிறது. காலை 7.00 மணிக்கு படையினரின் பாதுகாப்புடன் பயணிகளை ஏற்றிக் கொண்டு யாழ். நோக்கி பஸ்ஸில் புறப்பட்டோம். பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிகளுடன் பஸ் இளவாலைக்குச் சென்றது. பஸ்ஸில் சாரதியாக சிவலிங்கமும் நடத்துநராக ராஜேந்தரும் பணியாற்றினர்.

கோப்ரல் சமரதுங்க, முனசிவல ரியதிஸ்ஸ மற்றும் இளவாலைப் பொலீஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அனைவரிடமும் ரி. 56 ரக ஆயுதங்கள் இருந்தன.

பிற்பகல் 1.20 மணி இருக்கும் மாதகல் முகாமுக்குப் பொறுப்பான இரண்டாம் லெப்ரினன்ட் பிறேமலால் பஸ்ஸில் ஏறினார்.

இளவாலை பஸ் தரிப்பு நிலையத்தில் பஸ் நின்ற போது 1.40 மணி இருக்கும். அப்போது 'சிஸ்டர்' ஒருவரும் இரு பெண்களும் மற்றும் இளவாலைப் பொலீஸில் கடமைபுரியும் ஜயக்கொடி என்பவரும் பஸ்ஸில் ஏறினர்.

இவ்வாறு பஸ்ஸில் மக்கள் ஏறும் போதே நாம் அவர்களைச் சோதிப்போம்.

சம்பவம் நடந்ததினம்நான் பஸ்ஸின் பின்பக்கம் இருந்தேன் ஏனைய 4 பேரும் முன்பக்கமாக இருந்தனர். பஸ் புறப்பட்டு ஐந்து நிமிடம் இருக்கும்; அப்போதுதான் அந்தப்பெரிய சத்தம் கேட்டது. நான் கீழே இறங்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டேன். அப்போது எவரும் ஓடியதைநான்பார்க்கவில்லை.

கீழே இறங்கிய நான் மீண்டும் பஸ்ஸினுள் ஏறியபோது, கோப்ரல் சமரதுங்க, ரியதிஸ்ஸ, ஜயக்கொடி ஆகியோரும் சாரதியும் இறந்து கிடந்தனர். நான் பின் பக்கத்தில் இருந்ததால் தப்பித்துக் கொண்டேன்

லெப்ரினன்ட் பிரேமலால், பொலீஸ் கான்ஸ்டபிள் ஆராய்ச்சி ஆகியோர் காயமுற்றிருந்ததையும் பொது மக்களுள் ஒருவர் காயமடைந்திருப்பதையும் மற்றும் ஒருவர் இறந்து கிடப்பதையும் பின்னர்தான்நான்கண்டேன்.

உடனே சைக்கிளில்விளான் முகாமுக்குச் சென்று அறிவித்தேன். இதற்குள் இளவாலைப் பொலீஸாரும் சம்பவம் நடந்த இடத்துக்கு வந்திருந்தனர். காயமடைந்தவர்கள் பலாலி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் லெப்ரினன்ட் ஹேமலால் பலாலி மருத்துவமனையில் இறந்ததாக நான் பின்னர் அறிந்துகொண்டேன்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து 800 மீற்றர் தூரத்திலிருந்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்க வேண்டும். இதனை விடுதலைப் புலிகள் தான் செய்திருப்பார்கல் என்றே நான் கருதுகிறேன்—என்றார் (ஐ-உ-5)

## நூற்றாண்டு விழா

இணுவில் இந்துக்கல்லூரி இந்து மாமன்றம், திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தின் ஆதரவுடன் சுவாமி விவேகானந்தரின் யாழ். விஜய நூற்றாண்டு விழாவை அண்மையில்கொண்டாடியது.

கல்லூரி அதிபர் சுந்தரம் தம்பித்துரை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம அதிதியாக உடுவில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தர் கலந்து கொண்டார்.

பிரம்மஸ்ரீ நா. வீரமணி ஐயர், திருநெல்வேலி இராமகிருஷ்ணாலய இயக்குநர் இ. இராஜமகேந்திரசிங்கம் ஆகியோர் உட்பட பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

### கடந்த இரு தினங்களாக திருமலை நகரில் தீவிர தேடுதல்!

திருகோணமலை, ஜூலை 29

திருமலை நகரப் பகுதியில் கடந்த இரண்டு மூன்று நாள்களாகப் படையினரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரமாகியுள்ளன.

நகரின் முக்கிய பல பகுதிகள் படையினரால் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல்களுக்கு உட்பட்டுள்ளன.

திருமலை நகரில் பிரதான வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் படையினரும் பொலீஸாரும் கூட்டாகத் தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

நேற்று திருமலை நகரச் சந்தைப் பகுதியில் சோதனை நடத்தப்பட்டது. நேற்று மாலை மீண்டும் பிரதான வீதிப் பகுதிகளில் தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை திருமலை நகருக்குள் வரும் அனைவரும் கடந்த சில தினங்களாக முக்கிய சந்திகளில் சுமார் ஒரு மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டு சோதனையிடப்பட்ட பின்னரே நகருக்குள் அனுமதிக்கப்படுகின்றனர். (ஐ-150)

### ரயிலில் மயக்கமடையச் செய்து தமிழரின் மோதிரம் அபகரிப்பு!

கொழும்பு, ஜூலை 29

ரயிலில் பயணம் செய்த ஒருவர் தனது இரு மோதிரங்களையும் ரொக்கப் பணத்தையும் திருடர் கோஷ்டி ஒன்றிடம் இழந்துள்ளார்.

மயக்க மருந்து கலந்து இவருக்கு வழங்கப்பட்ட தின்பண்டமே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு கோட்டையில் இருந்து இரவு 10 மணிக்கு வவுனியா புறப்படும் ரயிலிலேயே இந்தகைய சம்பவங்கள் இடம் பெறுவதாகவும்

தமிழர்களே இதற்கு பலியாவதாகவும் அநுராதபுரம் பொலீஸார் தெரிவித்தனர்.

ரயிலில் அறிமுகம் இல்லாதவர்கள் கொடுக்கும் பிஸ்கெட், மற்றும் இனிப்பு வகைகளை வாங்கி உட்கொள்வதைத் தவிர்க்கும் படி ரயில் பயணிகளுக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் அ. யோசெவ்

28-06-97 இல் இறைவன் இணையடியில் இரண்டறக் கலந்த யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் பொதுப் பொருளாளர் அ. யோசெவ் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது சங்கம் ஆழ்ந்த அனுதாபத்தை அஞ்சலியாக்குகின்றது.

யாழ். மறைமாவட்டக்
கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்
யாழ்ப்பாணம். (48643)



## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்

### திரு. நா. வி. மு. நவரெத்தினம்

அவர்களின் தந்தையார்

### அமரர் விநாசித்தம்பி முருகேசு

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கவின்கலைமன்றம்,
(47351) இராமநாதன் நுண்கலைக்கழகம்.



## மரண அறிவித்தல்

### துரையப்பா நடராஜா

(இறைப்பாறிய சிறைச்சாலை களஞ்சியப் பொறுப்பாளர் - அனுராதபுரம்)

இருபாலையைப் பிறப்பிடப்பிடமாகக் கொண்டவரும், நல்லூர் செட்டித் தெருவில் வசித்தவருமாகிய துரையப்பா நடராஜா 27 - 07 - 1997 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் தையலம்மையின் அன்புக் கணவரும், திலகவதி, ஜெயபாலன் (பிரான்ஸ்), இராஜகோபாலன் (பிரான்ஸ்), சிறிதரன் (ஜேர்மனி), சிறிகரன் (ஜேர்மனி), கலைவாணி (U. K) ஆகியோரின் பாசமிகு தந்தையும், முத்துக்குமாரசாமி, ஜெயக்குமாரி (பிரான்ஸ்), விசாகை (பிரான்ஸ்), உதயகுமாரி (ஜேர்மனி), உமாசுதன் (U. K) ஆகியோரின் மாமனாரும், நமசிவாயத்தின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28 - 07 - 1997 திங்கட்கிழமை வழக்கம்பரை அம்மன் கோயிலடியில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
ந. தையலம்மை
(மனைவி)

வழக்கம்பரை அம்மன் கோயிலடி,
தொல்புரம்,
சுழிபுரம். (48629)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

### வெளிவாரிப் பரீட்சைகள் 1995

1. இரண்டாம் ஆண்டு பகுதி I சிறப்புக் கலைமாணி/ பொதுக் கலைமாணி/ வர்த்தகமாணி தேர்வுகள் — 22-09-97 இல் ஆரம்பமாகும்.
2. மூன்றாம் ஆண்டு பகுதி II சிறப்புக் கலைமாணி/ பொதுக் கலைமாணி/ வர்த்தகமாணித் தேர்வுகள் — 13-10-97 இல் ஆரம்பமாகும்.
3. நான்காம் ஆண்டு பகுதி III சிறப்புக் கலைமாணி/ வர்த்தகமாணி தேர்வுகள் — 27 10-97 இல் ஆரம்பமாகும்.

இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் யாவும் 15-08-97 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

இப்பரீட்சைக்கான நேரசூசியை வெளிவாரி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

★ கடந்த இரண்டு வருட வினாத்தாள்களும் விற்பனைக்குண்டு.

- பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.
(சி/1217)



## சமூக விஞ்ஞான மன்றத்தின் அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

28-07-1997 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பொருளியல்துறை மண்டபத்தில் அறிஞர்கள் முன்னிலையில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது:

அதன் முடிவுகள் வருமாறு;-

1 ஆம் பரிசு:- **3249 - துவிச்சக்கர வண்டி**
திரு. E. லிதியல் குருஸ், வங்காலை, மன்னார்.

2 ஆம் பரிசு:- **1472 - ரேடியோ ரேப் றெக்கோடர்**
திரு. M. சண், P.M.E.D, J.M.C, யாழ்ப்பாணம்.

3 ஆம் பரிசு:- **0678 - பெற்றோல் மாக்ஸ்**
திரு. M. VANAMANA, MOTTEN SEEMA, ALVAI EAST, ALVAI.

ஆறுதல் பரிசில்கள்:- 300/- பெறுமதியுடையது:

| | | | | |
|---|---|---|---|---|
| 1475 | 6156 | 2245 | 6772 | 3293 |
| 7419 | 6879 | 4753 | 3083 | 1585 |
| 2976 | 3441 | 4972 | 4131 | 1869 |
| 5866 | 0074 | 4842 | 6401 | 6448 |

மேற்படி இலக்கங்களையுடைய அதிர்ஷ்டசாலிகள் எமது மன்றத்துடன் உடன் தொடர்பு கொண்டு பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும்.

ஆதரவு நல்கிய அனைவருக்கும் எமது நன்றிகள்!

சமூக விஞ்ஞான மன்றம்,
(48642) யாழ். பல்கலைக் கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனை அற்ற பேச்சு என்ற அறிவிப்பை குஜ்ரால் வாபஸ்!

## ஆயுதப் போரைக் கைவிடக் கோருகிறார்

ஸ்ரீநகர், ஜுலை 29 இந்திய அரசு பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமானால் காஷ்மீரில் தனிநாடு கோரி வரும் தீவிர வாதிகளுடன் மெனில் அவர்கள் ஆயுதப் போராட்டத்தினை கைவிட வேண்டும் என்று இந்தியப் பிரதமர் இந்தர்குமார் குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

நிபந்தனையற்ற பேச்சுக்கு அரசு தயாராக இருக்கின்றது என கடந்த சனிக்கிழமை அழைப்பு விடுத்த குஜ்ரால் நேற்று முன்தினம் தமது நிலைப்பாட்டினை திடீரென மாற்றிக் கொண்டதற்கான காரணம் என்னவென்று தெரிவிக்கப்படவில்லை.

காஷ்மீர் பள்ளத்தாக்கில் தாம் மேற்கொண்ட இரண்டு நாள் பயணத்தின் இறுதியில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற பெரும் செய்தியாளர் கூட்டமொன்றில் குஜ்ரால் இவ்வாறு தெரிவித்தார்.

தோளில் துப்பாக்கியைத் தொங்கவிட்ட நிலையில் பேச்சுவார்த்தைகளை நடத்த முடியாது என்றார் அவர்.

காஷ்மீர் சம்பந்தமாக இந்தியாவும் பாகிஸ்தானும் இரு யுத்தங்களை நடத்தி முடித்திருப்பது தெரிந்ததே.

1972 இந்திரா — பூட்டோ சிம்லா ஒப்பந்தத்தின் பிரகாரம் காஷ்மீர் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்று இந்தியா இதுவரை வலியுறுத்தி வந்தது.

பரஸ்பரம் பேசிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று சிம்லா ஒப்பந்தம் தெரிவிக்கிறது.

(இ-5)

## லாலு விடுவிக்கப்பட்டாலும் நானே முதலமைச்சர்

### அவரது மனைவி தெரிவிப்பு

புதுடில்லி, ஜுலை 29

பீஹார் கால்நடைத் தீவன ஊழல் வழக்கில் தமது கணவர் லாலு பிரசாத் யாதவ் குற்றமற்றவர் என அறிவிக்கப்பட்டு நீதிமன்றம் அவரை விடுவித்தாலும் தாம் தம்முடைய பதவியிலிருந்து இராஜினாமா செய்யப் போவதில்லை என பீஹாரின் புதிய முதலமைச்சர் ரப்ரிதேவி கூறியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தம்முடைய அமைச்சர்கள் மற்றும் எம். எல். ஏக்களோடு ஆலோசித்து தம்முடைய சொந்த முடிகளை மேற்கொள்ளப்போவதாகவும் —

ஆயினும், சமுதாயத்தில் உள்ள ஏழை மக்கள் மற்றும் பின்தங்கிய வகுப்பினரின் நலனுக்காக தம்முடைய கணவரின் கொள்கைகளையே பின்பற்றப் போவதாகவும் — ரப்ரிதேவி தெரிவித்தார்.

(இ - 5)

## தேசிய அவமானம் என்று எதிர்க்கட்சிகள் கண்டனம்

புதுடில்லி, ஜுலை 29

பீஹார் மாநில முதலமைச்சராக லாலு பிரசாத் யாதவ்வின் மனைவி ரப்ரிதேவி பதவி ஏற்றது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

''இது தேசிய அவமானம்; ஜனநாயக கேலிக்கூத்து'' என பத்திரிகைகளும், எதிர்க்கட்சிகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் ஹர்க்கிஸ்சிங் சர்ஜித் செய்தியாளர்களிடம் பேசுகையில், ''ரப்ரிதேவி இதுவரை எந்த அரசியல் ஈடுபாடும் இல்லாதவர்; சட்டமன்ற உறுப்பினர் கூட இல்லை வீட்டில் ஒன்பது பிள்ளைகளின் தாய் அவரிடமிருந்து என்னதான் நாம் எதிர்பார்க்க முடியும்? என்று வேதனையோடு கேட்டார்.

இது பரிகாசத்துக்குரிய அடுக்களை என்றும் கேலியாக கூறினார் அவர்.

முதல்வர் பதவியை விட்டு லாலு பிரசாத் யாதவ்வை வெளியேற்றியது ஜனநாயகத்தின் வெற்றி என்பதை விட மோசமான தோல்வி என்றே கூறவேண்டும் என்று 'தரைம்ஸ் ஒவ் இந்தியா' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(இ-5)

## பதவிப் பிரமாண வாசகத்தை உச்சரிக்க முடியாத ரப்ரிதேவி!

புதுடில்லி, ஜுலை 29

நேற்றுமுன்தினம் பட்னா ஆளுநர் மாளிகையில் நடந்த பீஹார் மாநில முதலமைச்சர் பதவியேற்பு நிகழ்வின்போது பதவிப்பிரமாண வாசகங்களைக் கூட ரப்ரிதேவியால் சரியாக உச்சரிக்க முடியவில்லை என்றும்—

தேசியகீதம் இசைக்கப்பட்ட போது எழுந்து நிற்க வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியவில்லை என்றும்-தெரிவிக்கப்பட்டது.

பதவியேற்பு நிகழ்வு முடிந்த பின்னர் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் ரப்ரிதேவி எதுவுமே பேசவில்லையாம். லாலு பிரசாத் யாதவ்தான் அவருக்காக எல்லாம் கூறினார்.

இரண்டு நாள்களில் தமது மனைவி எல்லாம் சரியாக படித்து தேறி விடுவார் என்று லாலு பிரசாத் யாதவ் செய்தியாளர்களிடம் கூறினார்.

(இ-5)

## நாசிப்படையால் கொல்லப்பட்ட யூதரின் பல கோடி ரூபா சொத்து

### இஸ்ரேல் வங்கிகளில் முடக்கம்

ஜெருஸலேம், ஜுலை 29

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது நாசிப் படைகளின் இன அழிப்பு நடவடிக்கையில் கொல்லப்பட்ட யூதர்களின் சொத்து விவரங்கள் அடங்கிய பட்டியலை இஸ்ரேல் வெளியிடப் போவதாக அறிவித்துள்ளது.

எவரும் சொந்தம் பாராட்டாத- பல நூறு கோடி டொலர்கள் மதிப்புடைய-சொத்துக்கள் வங்கிகளில் முடங்கிக் கிடக்கின்றன என்றும்—

அவற்றின் வாரிசுகள் யார் எனக் கண்டுபிடித்து அவற்றை அவர்களிடம் ஒப்படைக்கும் முயற்சி இது என்றும்— தெரிவிக்கப்படுகிறது.

இப்பட்டியலில் சுமார் 18 ஆயிரத்து 200 பேர் இடம் பெற்றுள்ளனர்.

சுவிஸ் வங்கிகளில் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த வங்கிக்கணக்குகளின் முதல் பட்டியல் கடந்த புதன் கிழமை வெளியிடப்பட்டது.

சுவிஸ் வங்கிகள் வெளியிடப்போகும் இரண்டாம் பட்டியலில் சுமார் 20 ஆயிரம் பேரின் பெயர்கள் இருப்பதாக தெரியவந்துள்ளது.

(இ-5)

## சுபீலா எச்சரிக்கை

கின்ஷாசா, ஜுலை 29

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் (முன்னாள் ஸயர்) பதற்றமும் குழப்பமும் ஏற்படுத்திவரும் எதிர்க்கட்சிகளின் மீது அரச துருப்புக்கள் நடவடிக்கை எடுக்கும் என அதிபர் லோறன்ற் கபீலா தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான அத்தியனே ஸிஸகேடியின் தொண்டர்கள் நடத்திய இரு ஆர்ப்பாட்டங்களின் போது கபீலாவின் பாதுகாப்புப்படையினர் புகுந்து நடத்திய நடவடிக்கையில் 7பேர் கொல்லப்பட்டனர்; பலர் கைது செய்யப்பட்டனர்.

(இ-5)

## கம்போடிய தேசிய ஆட்சிமன்றம் நேற்று முதல் தடவையாக கூடியது

### றணரித் ஆதரவாளர்கள் வரவில்லை

பல மாத கால இடைவெளியின் பின்னர் கம்போடிய தேசிய ஆட்சி மன்றம் நேற்றுக் கூடியது.

கம்போடியாவின் முதலாவது பிரதமராக இருந்து இரண்டாவது பிரதமர் ஹுன்செனினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட நொரடோம் றணரித்தின் கட்சியைச் சேர்ந்த 19 உறுப்பினர்களும் அக்கட்சிக்கு ஆதரவு அளித்து வந்த நான்கு உறுப்பினர்களும் கூட்டத்துக்குச் சமுகம் அளிக்கவில்லை.

நொரடோம் றணரித்துக்குப் பதிலாக புதிய பிரதமர் ஒருவரை ஹுன் சென் நியமித்திருப்பது தெரிந்ததே.

அதேசமயம் கம்போடியாவின் உள்நாட்டு விவகாரத்தில் அண்டை நாடுகள் தலையிடக் கூடாது என்று ஹுன் சென் எச்சரித்துள்ளார்.

## முன் நிபந்தனையாக ஆயுதம் ஒப்படைக்க சின்பீன் மறுப்பு!

பெல்பாஸ்ட், ஜுலை. 29

ஐரீஷ் குடியரசு இராணுவத்தின் அரசியல் பிரிவான சின்பீன் அமைதிப்பேச்சில் கலந்துகொள்வதற்கு முன் நிபந்தனையாக ஆயுதங்களை ஒப்படைக்கப் போவதில்லை என்று தெரிவித்துள்ளது.

வட அயர்லாந்து பிரச்சினையில் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரின் அணுகுமுறையை சின்பீன் தலைவர் ஜெரி அடம்ஸ் வரவேற்றுள்ளார்.

வட அயர்லாந்தில் உள்ள புரட்டஸ்தாந்து யூனியனிஸ்ட்டுகள் பேச்சுவார்த்தைக்கு முன்னர் ஐரிஷ் குடியரசு இராணுவம் (ஐ.ஆர்.ஏ) ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என்று கோரி வருகின்றனர்.

இந்தப் பிரச்சினை காரணமாக செப்ரெம்பர் 15 ஆம் திகதி பெல்பாஸ்ட்டில் நடைபெற உள்ள அனைத்துக் கட்சிகள் மாநாடு பிரச்சினையை எதிர் நோக்கி உள்ளது.

பேச்சுவார்த்தைக்கு நிபந்தனை விதிப்பதை பிரிட்டிஷ் பிரதமர் ஏற்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

## உலக அரங்கில்

### ஹோவர் நதி கரைபுரண்டு ஓடுகிறது

பொன், ஜுலை 29

ஜேர்மனியின் ஹோவர் நதியில் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கும் வெள்ளப் பெருக்கு நகருக்குள் புகுந்துவிடாமல் இருக்க மீட்புப் பணியாளர்கள் போராடிக் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கரைகளை உடைத்துவிடாமல் இருக்க பிராங்பெட் நகரைச் சுற்றி எழுப்பப்பட்டுள்ள மணல்மூடைச் சுவர்களில் கடந்த 12 மணிநேரத்தினுள் 50 சென்ரி மீற்றர் உயரம் அதிகமாக நீர் பெருகியுள்ளது. இதனால் வெள்ளம் உடைத்துக்கொண்டு நகருக்குள் புகுந்துவிடும் அபாயம் அதிகரித்துள்ளது.

சுவரை உயர்த்தும் வேலையை தற்போது நிறுத்திக்கொண்டு அபாயப்பகுதியில் வாழும் சுமார் 85 ஆயிரம் மக்களை அப்புறப்படுத்தும் பணியில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

(இ-5)

## தரித்து நின்ற ரயிலுடன் அதிவேக ரயில் மோதியது

### டில்லியில் 10 பேர் பலி!

புதுடில்லி, ஜுலை 29

பெங்களூரிலிருந்து டில்லி நோக்கி சென்று கொண்டிருந்த அதிவேக ரயில் ஒன்று டில்லிக்கு அருகே நின்று கொண்டிருந்த கன்னியாகுமாரி ஜம்பு ரயிலில் நேற்று அதிகாலை பயங்கரமாக மோதியது.

ரயில் ஓட்டுநர் உட்பட 10 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். 100 பயணிகளுக்கு மேல் காயமடைந்தனர். இவர்களில் 50 பேரின் நிலைமை கவலைக்கிடமான நிலையிலிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இறந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகின்றது அரசு மற்றும் தனியார் மீட்புக்குழுக்கள் நிவாரணப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பெங்களூரில் இருந்து சென்ற ரயில் ஏற்கனவே 12 மணிநேரம்தாமதமாகியிருந்தாலும் —

நிலையத்தின் அடையாளங்களைப் பொட்படுத்தாது ஓடியதனாலும் — இந்த விபத்து ஏற்பட்டது என ரயில்துறை உயரதிகாரிகள் தெரிவித்ததாக ஏ. எவ். பி செய்தி அறிவித்தது.

ரயில்கள் இரண்டும் மோதிக் கொண்ட போது காதைப் பிளக்கும் பெரிய சத்தம் கேட்டதாக விபத்து நடந்த போது நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

(இ-5)

## பனிமலையில் சறுக்கி இருவர் மரணம்

லண்டன், ஜுலை 29

அல்பஸ் பனிமலையின் சிகரத்தில் ஏறிக்கொண்டிருந்த 17 வயது பெண் வீராங்கனை ஒருவரும் 16 வயது ஆண் வீரர் ஒருவரும் சறுக்கி விழுந்து உயிரிழந்தனர்,

இறந்தவர்கள் இருவரும் கணவன் மனைவி ஆவர்.

கடந்த வார இறுதியில் மட்டும் 7 பேர் இவ்வாறு உயிரிழந்தனர்.

(இ-5)

## ஜோர்ஜியாவில் 11 பேர் பலி

ஜோர்ஜியா, ஜுலை 29

முன்னாள் சோவியத் ஜோர்ஜியா குடியரசில் சுமார் 50 பேர் பயணம் செய்து கொண்டிருந்த பஸ் ஒன்று வீடு ஒன்றின் மேல் வேகமாகச் சென்று மோதியதில் 11 பேர் இறந்தனர்; 37 பேர் காயமடைந்தனர்.

(இ-5)

## யூதகுடியிருப்பு திட்டம் இடைநிறுத்தம்

இஸ்ரேல் — பலஸ்தீன மக்களிடையே பல போராட்டங்கள் எழக் காரணமான கிழக்கு ஜெருஸலமில் யூதக் குடியிருப்புக்களை அமைக்கும் திட்டத்தை இஸ்ரேல் இடை நிறுத்தம் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான உறவுகள் பாதிக்கப்பட யூத குடியிருப்புக்களே பிரதான காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆலய பாவனைக்கு உகந்த சட்ட விளக்கு விற்பனைக் குண்டு. அளவுகள் உயரம் அகலம் முறையே 1) 7' 9'' -5' 2'' 2) 5' 10''—4' 1'', 3) 4' 9''—2'6'', 4) 3' 0'' -2' 0'' தொடர்பு: செ. சபாரத்தினம் பத்தர் கண்டிவீதி' சாவகச்சேரி. (சி-1211)

சங்கானை மீன் சந்தைக்கு அருகாமையிலுள்ள அமரர் நா. செல்லையாவின், தேவி மரம் அரிவு தொழிற்சாலையிலுள்ள றோதை வாளும் பட்டடையும், தாரக் கொட்டகைகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கனகர் பாலசிங்கம் (மணியம்), சங்கானை மேற்கு, மாரியவத்தை. (48633)

### தவறிவிட்டது

சரசாலை தெற்கைச் சேர்ந்த வன்னித்தம்பி இரத்தினசிங்கம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன கடந்த வெள்ளிக்கிழமை சரசாலைக்கும் சாவகச்சேரிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மட்டுவில் கிழக்கு கிராம அலுவலர் கனகரத்தினத்திடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி - 1210)

சாந்தினி ஏபிரகாம், குதனை ஒழுங்கை, நவாலி வடக்கு, மானிப்பாய் என்பவரது விசேட அடையாள அட்டையும், தபால் அடையாள அட்டையும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மானிப்பாய் தபாற் கந்தோரில் ஒப்படைக்கவும். [48639]

### நாடகம் எழுதுவது 'எப்படி?

என்று விளக்கிக் கூறுகின்ற முதலாவது தமிழ் நூல் ரூபா 50. அக்கரைச் சீமையில் இலங்கை - இங்கிலாந்து நாவல் ரூபா 25, அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியவை. மாணவர்களுக்குப் பரிசளிப்பதற்கு ஏற்றவை. [48621]

### திருத்துதல்

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: R மருதம் 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். [48263]

### கார் விற்பனைக்கு

பாகம் ஆக்கவோ திருத்தி ஓடவோ கூடிய 1 ஸ்ரீ 9161, வொக்ஸ் வேகன் நீலம் விற்பனைக்குண்டு: ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். [48601]

### கற்பித்தல்

ஆரம்பகல்விக்கான 1 — 5 வரை ஒன்றிணைந்த பாடத்திட்டத்திற்கமைய சகல பாடங்களும் 4 மைல் சுற்றாடலுக்குள் எந்தநேரத்திலும் வீட்டிற்கு வந்து பாடம் கற்பிக்க முடியும். த. இராமநாதன். ஓய்வுபெற்ற ஆசிரியர், வட்டுவினி, இணுவில். [47349]

### ஆங்கிலம், கணிதம்

விசேடமாக (விடுதலைக்குள்) ஆண்டு 6 தொடக்கம் O/L வரை விசேட பெறுபேறடைய வாரம் 5 மணித்தியாலம் கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (48630)

## சனசமூக நிலையம்

மானிப்பாய், ஜூலை 29 மானிப்பாய் வடக்கிலுள்ள வளர்மதி சன சமூக நிலையம் புனரமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. (இ-90)

## கட்டுரை, கவிதைபோட்டி கோட்ட மட்ட முடிவுகள்

யாழ். மாவட்டயுனெஸ்கோ நிறுவனத்தினால் கோட்ட மட்டத்தில் நடைபெற்ற கவிதை, கட்டுரைப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு.

**கட்டுரை ஆக்கம்**

**முதலாம் பிரிவு**

★ 1ஆம்இடம்— சி. நிசாந்தினி, மல்லாகம் கனிஷ்ட வித்தி,

★ 2 ஆம்இடம்—ந வெண்ணிலா, மகாஜனக் கல்லூரி

★ 3 ஆம்இடம் - வா. தர்மிஷா, மகாஜனக் கல்லூரி

**இரண்டாம் பிரிவு**

★ 1 ஆம் இடம் — இ. தர்ஷா, மகாஜனக் கல்லூரி

★ 2 ஆம் இடம் — ஜெ. நிவேதிகா, யூனியன் கல்லூரி

★ 2 ஆம் இடம் — ச. லக்மன், மகாஜனக் கல்லூரி

**மூன்றாம் பிரிவு**

★ 1 ஆம் இடம்— இ. நிருஷா, மகாஜனக் கல்லூரி

★ 1 ஆம் இடம் — வி. பிரியா, யூனியன் கல்லூரி

★ 3 ஆம் இடம் — அ. மாதங்கி, மகாஜனக் கல்லூரி

**நான்காம் பிரிவு**

★ 1 ஆம் இடம் — லோ. பவதாரணி, மகாஜனக் கல்லூரி

★ 2 ஆம் இடம் — சி. சுமதி, அருணோதயக் கல்லூரி

★ 3 ஆம் இடம் — வி. ரவிசங்கர், மகாஜனக் கல்லூரி

★ 3 ஆம் இடம்— கு. பார்மதி யூனியன் கல்லூரி

**ஐந்தாம் பிரிவு**

★ 1 ஆம் இடம் — வை. சாரங்கன், மகாஜனக் கல்லூரி

★ 2 ஆம் இடம் — சி. சிவரூபன், மகாஜனக் கல்லூரி

★ 3 ஆம் இடம் — ந. அகிலன், யூனியன் கல்லூரி

**கவிதை ஆக்கம்**

**நான்காம் பிரிவு**

★ 1 ஆம் இடம்— இ. புராதனி, மகாஜனக் கல்லூரி

★ 1 ஆம் இடம் — ம. ஜெயகவிதா, குளமங்கால் றோ. க. வி.

★ 3 ஆம் இடம் — சி. பிரதீபன், வீமன்காமம் ம. வி.

**ஐந்தாம் பிரிவு**

★ 1 ஆம் இடம் — வை. சாரங்கன், மகாஜனக்கல்லூரி

★ 2 ஆம் இடம் — ப. சர்மிளா, யூனியன் கல்லூரி

★ 3 ஆம் இடம் — சி. சிவரூபன், மகாஜனக் கல்லூரி

## சந்தைக்குள் கால் நடைகள்

சாவகச்சேரி சந்தை வியாபாரிகளுக்கு தொல்லை தரும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு நகரசபை செயலாளர் சி. நடராசா அறிவித்துள்ளார்.

கட்டாக்காலியாக சந்தைக்குள் அலையும் கால்நடைகள் பிடிக்கப்பட்டு தண்டம் அறவிடப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-117)


## கண்ணீர் அஞ்சலி

யா / லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
2 ஆம் வருட மாணவி
செல்வி ச. சரளா
அவர்களின் தந்தையார்
**அமரர் சி. சந்திரன்**

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அவர்தம் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

மாணவர் மன்றம்
லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி.

(48631)



## இனியவா உனக்கு இதய அஞ்சலி

மலர்வு: 08 — 01 — 1971



உதிர்வு: 29 — 06 — 1997

கப்டன் இமாம்
**வேலாயுதம் சந்திரகுமார்**
பருத்தித்துறை

சோதர வேட்டையை நிறுத்தாதவர்கள்
தோழா உன்னுயிர் உதிரச் செய்தனர்
எத்தனை பலிகள்?
எத்தனை பலிகள்?
இன்னுமா சோதர வேட்டை தொடர்வு
மக்களை நேசித்தன் மக்களை நேசித்தன்
யாருக்கும் அது குத்தகை அல்லதே!
மரித்தாய் ஆயினும் மனங்களில் நிறைத்தாய்!
உதிர்ந்தாய் ஆனால் மக்களின் நினைவில்.

(சி/1208)


## விடுமுறையில் வந்த ஊழியர்கள் திரும்பிச் செல்ல முடியாது அவதி

### இங்கு கையொப்பமிட அனுமதியில்லை

தென்மராட்சி, ஜூலை 29 விடுமுறையில் வந்த ஊழியர்கள் பலர் கப்பல் சேவை நிறுத்தப்பட்டதால் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

இவர்களில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் மன்னார் டிப்போ ஊழியர்களும் அடங்குவர்.

கோண்டாவில் டிப்போவில் இவர்கள் கையொப்பமிடவும் அனுமதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது. (இ-117)

## தென்மராட்சிப் பகுதியில் எரிபொருள் விநியோகம் நிறுத்தம்

### மினிபஸ் சேவை பாதிப்புறலாம்

தென்மராட்சி, ஜூலை 29 தென்மராட்சிப் பிரதேச எரிபொருள் விற்பனவு நிலையங்களில் டீசல் பெற்றோல் உட்பட எரி பொருள்கள் விற்பது நியத்தப்பட்டுள்ளதால் தனியார் வாகன சேவைகள் ஸ்தம்பிதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

டீசல் தட்டுப்பாடு காரணமாக தென்மராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினர் மினி பஸ் சேவைகளை மட்டுப் படுத்தப்பட்ட அளவில் நடத்தி வருகின்றனர்.

வெளிச் சந்தையில் டீசல் ரூபா 60 ஆகவும், மண்ணெணெய் ரூபா 70 ஆகவும் விற்கப்படுவதால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாட்டினால் காலபோக நெற்செய்கை ஆரம்ப வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. (இ-111)

## மலசல கூடங்கள் அமைக்கும் வேலை பஸ் நிலையத்தில் ஆரம்பம்

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இரண்டு பொது மலசல கூடங்களை நிறுவும் வேலைகள் யாழ். மாநகர சபை பகுதியினரால் இவ் வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனை கட்டுவதற்கு தடையாக இருந்து வந்த இரு தற்காலிக கடைகள் அங்கிருந்து அகற்றப்பட்டதை அடுத்து இவ்வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் இம் மலசல கூடங்கள் அமைக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (இ-135)

## தனியார் மருந்தகங்களின் உரிமையாளர் கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் மருந்துகள், ஒப்பனை சாதானங்கள் அதிகார சபையில் தம்மை பதிவு செய்து கொண்ட தனியார் மருந்தகங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் கூட்டமொன்று சுகாதார திணைக்களத்தில் நடத்தப்பட்ட போது ''பதிவு செய்யப்பட்ட மருந்து பொருள் விற்பனையாளர் சங்கம்'' என்ற பெயரில் சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் டாக்டர் கே. ரி. சிவபாதம் தலைமையில் யாழ். மாவட்ட மருந்து களஞ்சிய மேல்மாடியிலுள்ள கருத்தரங்கு மண்டபத்தில் இக் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

பிரதி மாகாண பணிப்பாளர் டாக்டர் கே. ரி. சிவபாதம் அங்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் யாழ். பிராந்தியத்திலுள்ள மருந்தகங்களிலும், தனியார் மருந்து விற்பனை நிலையங்களிலும் மருந்து சம்பந்தமான அறிவும், அனுபவமும் இல்லாத பலர் மருந்து விற்பனையில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்று தெரிய வந்துள்ளது. இவற்றில் கடமையாற்றுபவர்கள் உரிய தகுதியும், அனுபவமும் உடையவர்களாக இருக்க வேண்டியது அவசியம். மக்கள் நலன் கருதி இவற்றை தீவிரமாக கண்காணிக்க நாம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம் என்றார் —

''சகலமருந்தகங்களும் மற்றும் தனியார் மருந்து விற்பனை நிலையங்களும் திணைக்கள சட்ட விதிகளுக்கு இணங்க தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் ரி. மகாதேவன் உரையாற்றுகையில், மருந்து வகைகள், ஒப்பனை சாதனங்கள் அதிகார சபையில் பதிவு செய்து மருந்துப் பொருள்களை மக்களின் நலன் கருதி சரியான விதிகளை அனுசரித்து விற்பனை செய்ய மருந்தகங்கள் மற்றும் தனியார் மருந்து விற்பனை நிலையங்களின் உரிமையாளர்கள் முன்வர வேண்டும் என்று அறிவுறுத்தினார். (இ-135)


## வாழ்த்துகின்றோம்

எங்கள் கல்லூரிப் பழைய மாணவரும்,
கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை முன்னாள்
அதிபரும், எங்கள் கல்லூரி முன்னாள் உப அதிபருமான
"ஸ்கந்தவரோதயன்"
**திரு. அ. தற்பரானந்தன் அவர்கள்**

உடுவில் கல்விக் கோட்டத்திற்குக் கல்வி அதிகாரியாகச் சேவையாற்ற வந்தமை குறித்து மகிழ்ச்சி அடைவதோடு அவரின் நற்பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
அலுவலர்கள், மாணவர்கள்.
ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

(சி/1215)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு பொருள்கள் உள்ளடக்கப்பட்ட

# சுமார் 200 கடிதங்கள் தேக்கம்!

## அனுப்பியவர்களுக்கே திருப்பி அனுப்ப முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 29

குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்குக் கடிதங்களை அனுப்புவோர் அதற்குள் விபூதி போன்ற சிறு பொருள்களை உள்ளடக்குவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் மீண்டும் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வாறு சிறு பொருள்கள் உள்ளடங்கியிருந்த சுமார் 200 கடிதங்கள் வெளியிடங்களுக்கு அனுப்பப்படாமல் தபாலகத்தில் தேங்கிக் கிடப்பதாகவும் விரைவில் அவை அவற்றை அனுப்பியவர்களுக்கே திருப்பி அனுப்பப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குடாநாட்டில் இருந்து அனுப்பப்படும் கடிதங்கள் தபால் உத்தியோகத்தர்களின் முன்னிலையில் பொலீஸ் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் சோதனையிடப்பட்ட பின்னரே விமானம் மூலம் அனுப்புவதற்காகப் பலாலிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

இவ்வாறு சோதனையிடப்படும் போது சிறசிறு பொருள்களை உள்ளடக்கிய கடிதங்கள் வேறுபடுத்தப்பட்டு தனியாக வைக்கப்படுகின்றன.

அவை தபால் பொதியில் சேர்க்கப்படாமல் தபாலகத்திலேயே தேங்கிக் கிடக்கின்றன. இவ்வாறு தேங்கிய கடிதங்களே உரியவர்களுக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளன. (ஐ)

# சுன்னாகம் றோட்டரக்ட் கழகபதவிஏற்புவைபவம்

வலிகாமம்தெற்கு, ஜூலை 29

சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தின் மூன்றாவது பதவி ஏற்பு வைபவம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகத்தின் செயலாளர் றொட்டேரியன் கே. சிறீபதி இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

றோட்டரக்ட் கழகத்தின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட வி. பி. சசிவர்ணனுக்கு தலைவருக்கான சின்னத்தை பிரதம விருந்தினர் சூட்டி, வரவேற்று உரையாற்றினார்.

கழகத்தின் முன்னாள் தலைவர்களான ஏ.ஜே ஜி. ஜெயச்சந்திரா, ரி. வாமதேவன் ஆகியோரும் சிறப்புரையாற்றினர்.

றோட்டரக்ட் கழகத்தின் "நான்குவழிச் சோதனை" அட்டை வெளியீடும் இடம் பெற்றது.

பாடசாலை இன்ரறக்ட் கழக மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (இ - 152)

# காரைநகருக்கு குடிதண்ணீர் விநியோகிக்க ஐ. நா. உதவி

காரைநகர் பகுதிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கென எட்டு லட்சம் ரூபாவை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வழங்க உள்ளது.

காரைநகர்ப் பகுதிக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட குடிதண்ணீர்க் குழாய்கள் பழுதடைந்துள்ளதால் அவை திருத்தப்பட உள்ளன. (இ-117)

## நன்கொடை

கொழும்புத்துறை, ஜூலை 29

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு 1997 ஆம் ஆண்டுக்குரிய நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

எதிர் வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் யாழ். மாநகர சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு நிலைய நிர்வாகிகள் கோரப்பட்டுள்ளனர். (இ-30)

## புனரமைப்பு

ஊர்காவற்றுறை பொதுச் சந்தையின் மீன், இறைச்சி விற்பனைப் பகுதி பிரதேச சபையினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இவற்றைத் திருத்தியமைக்க தீவகம் வடக்கு பிரதேச செயலகத்தினால் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் 1 லட்சத்து 15 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளன.

# முகாமைத்துவ மாணவருக்கு ஆங்கிலம், கணிதம் அவசியம்

## சஞ்சிகை வெளியீட்டு விழாவில் உரை

"முகாமைத்துவ பாடங்களை கற்கும் மாணவர்களுக்கு ஆங்கிலமும், கணிதமும் மிகவும் முக்கியம் வாய்ந்தவையாக இருப்பதால் இவ்விரு பாடங்களிலும் அவர்கள் போதிய தேர்ச்சியும் பயிற்சியும் பெற வேண்டியது மிகவும் அவசியம்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட "வணிக வனிதை" சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத் துறை தலைவர் மா. நடராஜசுந்தரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வர்த்தக மாணவர் ஒன்றியத் தலைவர் க. யாழினி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நடராஜசுந்தரம் தொடர்ந்து உரையாற்றுகையில் கணனி மயப்படுத்தப்பட்ட இன்றைய உலகில் கணனிக் கல்வி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக கருதப்படுகின்றது. பல நகரங்களிலுள்ள வர்த்தக நிறுவனங்களிலும், வங்கி அலுவலகங்களிலும் மகளிர் பெருமளவில் கணனி செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றதை அவதானிக்கலாம்.

இங்குள்ள மாணவர்கள் பரீட்சைகளுக்கு தோற்றிவிட்டு பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் காலப்பகுதியில் தட்டெழுத்து பயிற்சி பெற்றால் கணனி படிப்பதற்கு இலகுவாக இருக்கும் என்றார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யாழ். கல்வி வலயம் ஒன்றின் வணிக கல்வி விசேட அலுவலர் வ. க. பாலசுப்பிரமணியம் உரையாற்றுகையில் "இக் கல்லூரியில் கடந்த 15 வருட காலமாக வணிகபிரிவு சிறந்த முறையில் செயற்பட்டு வந்துள்ளதை வணிகத்துறை சார்ந்த பாடங்களில் மாணவிகள் பெற்ற சிறந்த பெறுபேறுகள் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளன. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இக்கால கட்டத்தில் புதுப் பொலிவுடன் அறிவியல் ஏடாக "வணிக வனிதை" மூன்றாவது மலர் வெளியிடப்பட்டுள்ளது ஒரு சாதனை என்றே எமக்கு தோன்றுகின்றது.

மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக் கொண்டு வருவதன் மூலம் தன்னம்பிக்கை, தலைமைத்துவம் போன்ற ஆளுமைப் பண்புகளை வளர்த்து அவர்களை சமூகத்திற்கும் நாட்டுக்கும் உகந்த நற்பிரஜைகளாக உருவாக்குவதற்கு இம் மலர் வெளியீடு உந்து சக்தியாக அமைகின்றது என்றார்

வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை விரிவுரையாளர் ச. நித்தியலட்சுமியும், ஆசியுரையை கல்லூரி அதிபர் சரஸ்வதி ஜெயராசாவும் நிழ்த்தினார்கள்.

ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக கல்வியற்றுறை விரிவுரையாளர் மா. சின்னத்தம்பியும், பதிலுரையை இதழாசிரியர் தி. நிருபாவும் நிகழ்த்தினார்கள்.

வணிகப்பிரிவு பொறுப்பாசிரியர் திருமதி த. ச. யோகேஸ்வரன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். வர்த்தக மாணவர் மன்ற செயலாளர் குகாஜினி நன்றியுரரை நிகழ்த்தினார். (இ-135)

# எத்தனை சாமிகள் வந்தாலும் ஜெயலலிதா தப்ப முடியாது

அ. தி. மு. க. (திரு) அணி பொதுச் செயலாளர் திருநாவுக்கரசு திருச்சியில் செய்தியாளர்களுக்கு அளித்தபேட்டி இது.

எங்களது அறப்போராட்டத்தின் தர்மயுத்தத்தின் முக்கிய நோக்கம் ஜெயலலிதாவை அரசியலில் இருந்து அப்புறப்படுத்துவதுதான்.

ஜெயலலிதா சர்வாதிகார முறையில் அ. தி. மு. க. என்கிற மா பெரும் மக்கள் இயக்கத்தை தோற்கடிக்க வைத்து விட்டு தானும் தோற்றார். இதன் மூலம் அ. தி. க. விற்கு மிகப் பெரிய இழிவை சேர்த்துக் கொடுத்தார்.

ஜெயலலிதாவை மக்கள் வெறுத்து ஒதுக்கி விட்டார்கள். என்னதான் அவர் எளிமை வேஷம் போட்டாலும் மக்கள் இனி ஜெயலலிதாவை மறக்கவும் மாட்டார்கள். மன்னிக்கவும் மாட்டார்கள்.

தமிழக அரசியலில் ஜெயலலிதாவின் அரசியல் சகாப்தம் தமிழ் நாட்டு மக்களால் ஏற்கனவே முடித்து வைக்கப்பட்டு விட்டது.

### தர்மயுத்தம்

ஜெயலலிதாவிடம் இருந்து எம். ஜி. ஆர். விசுவாசிகள் அனைவரும் ஏறக்குறைய வெளியேறி விட்டார்கள். இப்போதுஎம். ஜி. ஆரின் விசுவாசிகளுக்கும் ஜெயலலிதாவின் துதிபாடிகளுக்கும் இடையேதர்மயுத்தம் நடந்து கொண்டிருக்கிறது.

இதில் நிச்சயமாக புரட்சித் தலைவரின் விசுவாசிகள்தான் வெற்றி பெறுவார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

எத்தனை சாமிகள் வந்தாலும்

செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

கேள்வி: ஜெயலலிதா, கோபால்சாமி கூட்டணி பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: ஜெயலலிதா தன்னுடைய வீழ்ச்சியை சரிப்படுத்திக் கொள்ள புதிதாக பொருந்தா கூட்டணிகளை நாடிவருகிறார்.

கோபால்சாமி, சுப்பிரமணியசாமி என எத்தனை சாமிகள் சேர்ந்தாலும் ஜெயலலிதா வீழ்ச்சியில் இருந்து எழுந்துவிட முடியாது. நடந்து முடிந்த உள்ளாட்சி இடைத் தேர்தலில் அ. தி. மு. க. (ஜெ.) ம. தி. மு. க. கூட்டணியை மக்கள் 3 ஆவது இடத்திற்கு தள்ளி விட்டார்கள்.

### முனுஆதி விலகல்

துறையூர் நகரசபையில் தனித்து போட்டியிட்டு வெற்றி பெற்ற ம. தி. மு. க, ஜெயலலிதாவுடன் கூட்டணி சேர்ந்து இப்போது ஏற்கனவே வாங்கிய வாக்குகளில் இருந்து சுமார் 5000 வாக்குகளை குறைவாக வாங்கி தோல்வி அடைந்திருக்கிறது.

இது போல திருச்சி 45-வது வார்ட்டில் அ. தி. மு. க (ஜெ.) ம. தி. மு. க. கூட்டணி தோற்றதோடு மட்டுமல்லாமல் கட்டுப்பணத்தையும் பறிகொடுத்து விட்டது. இந்தக் கூட்டணியை ம. தி. மு. க வில் உள்ள தலைவர்களும், தொண்டர்களும் விரும்பவில்லை.

கூட்டணியை எதிர்த்து முன்னாள் சபாநாயகர் முனுஆதி ம. தி. மு. க வில்



இருந்து வெளியேறிவிட்டார்.

ஜெயலலிதா ஆட்சியை கடுமையாக விமர்சனம் செய்து கன்னியாகுமரியில் கோபால்சாமி நடைபயணம் சென்றார். ஆட்சியை பிடித்து ஜெயலலிதா கொள்ளை அடித்து வைத்துள்ள சொத்துக்கள் அனைத்தையும் நாட்டுடைமை ஆக்குவேன் என்று கூறினார்.

அவர் தற்போது ஜெயலலிதா விடம் சென்று உள்ளார். ஜெயலலிதாவிடம் சொத்துக்களை கேட்டு வாங்கி நாட்டுடமை ஆக்குவாரோ என்னவோ தெரியவில்லை. இந்தக் கூட்டணி முதல் கோணல் முற்றும் கோணல் என்பது போலத் தான்.

கேள்வி: ஜெயலலிதாவுடன் சுப்பிரமணியசாமியும் கூட்டணி சேர்ந்து உள்ளாரே?

பதில்: சுப்பிரமணியசாமி ஜெயலலிதாவை விட்டு வெளியே இருந்த போதும் ஜெயலலிதாவை கெடுத்தார். அவர் இப்போது ஜெயலலிதாவின் பக்கத்தில் இருந்து கொண்டு ஜெயலலிதாவை வீழ்த்துவார். அவர் எப்போதும் ஒரு குறிக்கோளுடன் தான் இருப்பார். அந்தக் குறி தப்பாது என்று தான் நினைக்கிறேன்.

### அ. தி. மு. க வை கைப்பற்றி விடுவாரா?

கேள்வி: இன்னும் 4 வருடங்களுக்குள் எப்படியும் ஜெயலலிதாவுக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்பு வந்து விடும். அப்போது அ. தி. மு. க வுக்கு தலைமை தாங்க ஆள் இல்லாமல் போய்விடும். அந்த சந்தர்ப்பத்தில்எம். ஜி. ஆர். தொண்டர்களுக்கும், தனக்கும் எந்தவித மோதலும் ஒரு போதும் இருந்தது கிடையாது என்று கூறிவை. கோபால்சாமி அ. தி. மு. க வை கைப்பற்றி விடுவார் என்றுகூறப்படுகிறதே?

பதில்: கோபால்சாமி எம். ஜி. ஆர். உயிரோடு இருந்த போது அவரைகடுமையாக விமர்சனம் செய்தார். இதை எம். ஜி. ஆரின் தொண்டர்கள் எளிதில் மறந்து விட மாட்டார்கள். அ. தி. மு. க. தொண்டர்களை தன்பக்கம் இழுத்து விடலாம் என்று கோபால்சாமி கருதினால் அது பகல் கனவாகத் தான் இருக்கும். இதை ஜெயலலிதா உணர ஆரம்பித்தாலே கூட்டணிபாதியில் முறிந்து விடும்.

### மகிழ்ச்சிதான்

கேள்வி: ஆர். எம். வீரப்பன் நீங்கள் விடுத்த அழைப்பை சரியில்லை என்று கூறி உள்ளாரே?

பதில்: அவர் ஜெயலலிதாவை தொடர்ந்து எதிர்த்து வருகிறார். ஜெயலலிதா எதிர்ப்பை மையமாக வைத்து அரசியல் நடத்துகிறார் என்பதில் எங்களுக்கு மகிழ்ச்சி தான்.

கேள்வி: சேலத்தில் தனக்கு அதிகமானகூட்டம் வந்தது என்றும் தன்னுடைய நகைகளை நீதிமன்றத்தில் இருந்து மீட்டு ஏழை மக்களுக்கு கொடுப்பேன் என்றும் ஜெயலலிதா கூறி உள்ளாரே?

பதில்: தேர்தலில் தோற்று போவோம் என்பதை உணர்ந்தவுடனேயே ஜெயலலிதா தனது நகைகளையும், சொத்துக்களையும் வெளி மாநிலங்களுக்கு கடத்தி விட்டார். இப்படி பெட்டி, பெட்டியாக கடத்தப்பட்டதே அதிகம். இதுபோக தமிழ்நாடு முழுவதிலும் ஜெயலலிதா, சசிகலா கும்பலுக்கும் 100-க்கும் மேற்பட்ட இடங்களில் சொத்துக்கள் உள்ளன.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் எதிர்காலம் யுத்தத்தினால் கேள்விக் குறி

## நீதி, சமாதானக் குழு கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

சமாதானம் மலராதா என ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த தமிழ்மக்கள் மத்தியில் மீண்டும் தொடங்கப்பட்ட இன்றைய வன்னி யுத்தம் எமது எதிர்காலத்தை கேள்விக்குறியாக மாற்றி நிற்பது மட்டுமல்லாமல் மனிதமாண்பின் அத்தனை பரிமாணங்களையும் சீர்குலைத்து நிற்கிறது.

கடந்த காலங்களில் இப்படியான யுத்தங்கள் எமது சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் பல. இத்தாக்கங்களிலிருந்து இன்னும் மீள முடியாமல் எம் மக்கள் தவித்துக்கொண்டிருக்கும் நிலைதான் இன்றைய யதார்த்தம்.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதானக் குழு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இந்நிலையினை நன்குணர்ந்தும் இப்போரை முன்னெடுத்துச் செல்பவர்கள் வெறும் கௌரவத்துக்காக யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். உயிரிழப்புக்கள், அங்கவீனராதல், உடமை இழப்புக்கள், உணவின்மை, உயிர்காக்கும் மருந்தின்மை, அகதிவாழ்வு போன்ற அவலங்களை இப்போர் வன்னியில் வாழும் எம் உடன்பிறப்புக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட கொடிய போர் உடன் நிறுத்தப்படவேண்டும். நாம் மனிதமுகமிழந்து நாடோடிகளாக, நடைபிணமாக மாறிக் கொண்டிருக்கும் பரிதாபம் நீங்கவேண்டும்.

எனவே வெறும் பெருமைக்காக அதிகாரப்போக்கோடு நடத்தப்படுகின்ற இப்போரினால் நிராயுதபாணிகளான அப்பாவிப் பொது மக்கள் படும் துன்பங்களை யாவது உணர்ந்து நீதியுடன் கூடிய சமாதானத்தைக்காண அனைத்துத் தலைவர்களும் முன்வரவேண்டும்.

சமாதானப் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைக் காணும் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு இக்கொடிய யுத்தத்துக்கு முடிவு கான வழி சமைக்குமாறு அனைவரையும் வினயமாக வேண்டி நிற்கிறோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அரிசி, கிழங்கு, மீன் விலைகள் தென்பகுதியில் திடீர் உயர்வு

கொழும்பு, ஜூலை 29

தெற்கில் கடந்த வாரம் அரிசி, உருளைக்கிழங்கு, மீன் விலைகள் திடீர் என உயர்ந்து காணப்பட்டதாக ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.

நுவரெலியாவில் உருளைக்கிழங்கின் பருவகாலம் முடிவடைந்தது மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றால் உருளைக் கிழங்கு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

மீன்விலை உயர்வுக்கு திருகோணமலையில் இருந்து கொழும்புக்கு மீன் அனுப்பப்படாததே காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக கடந்த வாரம் திருகோணமலை மீன் தெற்கே அனுப்பப்படவில்லை.

அதேசமயம் கண்டியில் மரக்கறிகள் அமோகவிளைச்சல் கண்டிருப்பதால் கொழும்பில் மரக்கறிவிலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. (இ)

## காய்கறியுடன் வந்த லொறி மூவருடன் கடத்தப்பட்டது

### பொத்துவில் பகுதியில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 29

காய்கறி ஏற்றி வந்த லொறியும் அதில் இருந்த மூவரும் கடத்தப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று— பொத்துவில் வீதியில் இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது.

ஆயுத பாணிகளான இனந் தெரியாத நால்வர் இந்த லொறியை மறித்து அதில் இருந்த மூவரையும் லொறியுடன் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொத்துவில் பொலீஸார் இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். (இ)


## வியாபாரிகள் கவனத்துக்கு

குளிர்சாதனப் பெட்டிகளுக்குத் தேவையான காஸ்சிலிண்டர், பிளாஸ்டிக் வகைகள், கல்வனைஸ் வாளி, கடித உறைகள், நெற் Bag, தடிகள், இந்தியன் ஊதுபத்தி வகைகள், ஐஸ்பழத் தடி, ஐஸ்கோண் ஆகியவை பெற்றுக் கொள்ள

நாடவேண்டிய இடம்:-

**நியூ நாதன் றேடர்ஸ்**

213, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(48554)



## பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபி. கூ. சங்கம் (வரையுள்ளது)

### அறிவித்தல்

**விஷேட பொதுக்கூட்டம் 30-07-1997 புதன்**

எமது சங்கத்தின் விஷேட பொதுக்கூட்டம் 30 - 07 - 97 புதன்கிழமை பண்டத்தரிப்பில் அமைந்துள்ள எமது சங்க அலுவலகத்தில் முற்பகல் 11.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

எனவே பொதுச் சபை உறுப்பினர்கள் அனைவரும் கலந்து நிகழ்ச்சி சிறப்புற ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மா. மகேந்திரம், தலைவர்.

ச. செபஸ்ரியாம்பிள்ளை, செயலாளர்

(சி/ 1216)



## இதய அஞ்சலி

**அமரர் சிற்றம்பலம் சந்திரன்**

(கூட்டுறவுப் பரிசோதகர் தரம் I)

எமது திணைக்கள உத்தியோகத்தர்

**அமரர் சிற்றம்பலம் சந்திரன்**

அவர்களின் திடீர் மறைவைக் கேள்வியுற்று அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்

யாழ். மா. கூ. திணைக்கள உத்தியோகத்தர் நலன்புரிக் கூ. சங்கம்.

(48638)


## மண்வெட்டி வழங்கக் கோரிக்கை

உடுவில் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தரால் வழங்கப்படவுள்ள "தோட்டமண்வெட்டிகள் பகுதி நேர விவசாயிகள், கூலி விவசாயிகள் ஆகியோருக்கும்வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்று மானிப்பாய் வடக்கு விவசாயிகள் சம்மேளனம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. (இ-90)

## பாராட்டும் வரவேற்பும்

வலிகாமம் தெற்கு ஜூலை 29

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி கோட்டக்கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுள்ள ஆ. வ. கணேசலிங்கத்தினது சேவையைப் பாராட்டியும்—

புதிய அதிபரான ச. கைலாசநாதனை வரவேற்றும்— பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட உள்ள கூட்டம் எதிர் வரும் வியாழக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம் பெறும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க உப தலைவர் தி. சிவ தெட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெறும் இவ்கூட்டத்தில் வலி. மேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராசா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. கணபதிப்பிள்ளை, உடுவில் கோட்ட கல்வி அதிகாரி [illegible] உள்ளனர். (இ-152)

## தொண்டர் ஆசிரியருக்கு நியமனம் வேண்டும்

யாழ். மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகளில், 1990ஆம் ஆண்டளவில் தமிழ் மொழிமூல ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் பற்றாக்குறை மிகுந்திருந்தது. அதனால் ஆரம்ப வகுப்பு மாணவர்களின் கல்வி நிலையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இதனை உய்த்துணர்ந்த கல்விப்பணிப்பாளர்கள், ஒவ்வொரு கல்விக் கோட்டத்திலும் உள்ள, உயர்கல்விச் சான்றிதழ் பெற்ற இளைஞர் மற்றும் யுவதிகளிடம் இருந்தும், தொண்டர் ஆசிரியர் நியமனம் சார்பாக விண்ணப்பங்கள் கோரினார்கள். கோட்டக் கல்விப் பணிப்பாளர்களால் நியமிக்கப்பட்ட அதிபர் குழுவினர் நேர்முகத் தேர்வு நடத்தினார்கள். பொருத்தமானவர்களுக்குத் தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்கினார்கள்.

### வாசகர் திருமுகம்

நியமனமான தொண்டர் ஆசிரியர்களுக்கு, மாதாந்த வாழ்க்கைப்படியாக மாதாந்தோறும் மிகச்சிறு தொகைப் பணம் கல்விக் கோட்டங்களில் வைத்தே நேரடியாக வழங்கினார்கள். கடந்த 5 வருடங்களுக்கு மேலாகத் தொண்டர் ஆசிரியர்கள், தங்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு சேவை செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் இதுவரை நிரந்தர நியமனம் கிடைக்கவேயில்லை.

அதிபர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க நிர்வாகத்தினரால் தான் தோன்றித் தனமான முறையில் இந்தத் தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் பெறவில்லை என்பது, இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய உண்மையாகும்.

தொண்டர் ஆசிரியர் சங்கம், நிரந்தர நியமனம் சம்பந்தமாகப், பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கும் இவ்வேளையில், தமிழர் ஆசிரியர் சங்கமும் தோள்கொடுத்து உதவ வேண்டும். கல்விசார் உயர் மட்டங்களை அணுகிக் குரல் கொடுத்தும், கோரிக்கையைச் சமர்ப்பித்தும், சமூக நீதியை வற்புறுத்தியும், தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனத்துக்கு, உறுதுணை செய்ய வேண்டும்.

கடந்த காலங்களில் தமிழர் ஆசிரியர்சங்கம், ஆசிரிய சேவை நலன்களை முன்னெடுத்து அரும்பாடு பட்டு அரிய பல சாதனைகள் நிலைநாட்டியதைச் சமூகம் நன்கறியும். ஆகவே தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் சம்பந்தமாகவும் நீதி கிடைக்க உழைக்க வேண்டியது தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நீங்காக் கடமையாகும்.

கடந்த 5 வருடங்களுக்கு மேலாகத் திரிசங்கு நிலையில் தொங்கிக் கொண்டு தங்கள் நோக்கத்தையும், சக்தியையும் இதயப்பூர்வமாக, ஆசிரியசேவையில் தொடர்ந்து ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனத் தேர்வில், அவர்களின் அடிப்படைக் கல்வித் தகைமை, சேவை மூப்புக்காலம் ஆகிய அம்சங்களில் அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதே சமூக நீதியாகும்.

தொண்டமானாறு. க. கி, பிள்ளை

## திரும்பி வருவோருக்கு வேலை கிடைக்காதா?

யாழ்ப்பாணப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து வன்னிக்குச் சென்ற அரச ஊழியர்கள் மீண்டும் தமது பகுதிக்கு வந்துகொண்டிருக்கிறனர். அவ்வாறு வரும் அரச ஊழியர்களுக்கு வேலை வழங்குவதில், பழைய சம்பளப்பாக்கி வழங்குவதில் திணைக்களத்திற்குத் திணைக்களம் வெவ்வேறு நடைமுறைகளைப் பின்பற்றப்படுகின்றன. இதனால் பாதிக்கப்படும் அரச ஊழியர்களின் நிலை மிகவும் பரிதாபகரமானதாகும்.

யாழ்ப்பாணம் திரும்பும் அரச ஊழியர்களுக்கு பல திணைக்களங்களும் உடனடியாக வேலை வழங்கும் பொழுது அஞ்சல் திணைக்களம் மாத்திரம் வேலை வழங்காது துன்பப்பட்ட ஊழியர்களை மேலும் மேலும் வருத்தி வருகின்றது. மற்றைய திணைக்களங்கள் முழுச்சம்பளமும் வழங்கும் போது அஞ்சல்திணைக்களம் மட்டும்சுற்று நிருபத்துக்கு மாறாக ஏன் நடந்து கொள்கின்றது என்பது பெரிய கேள்வியையே எழுப்புகின்றது.

இடம் பெயர்ந்து சென்றவர்கள் திரும்பி வந்தால் அவர்களுக்கு வேலை வழங்கப்படலாகாது என்று எந்த அறிவுறுத்தல்களும் இல்லாத நிலையில். அஞ்சல் திணைக்கள யாழ்ப்பாணப் பிரிவு மட்டும் வேலை வழங்காதது மட்டுமல்ல, புதியவர்களையும் வேலைக்கு நியமித்துள்ளது.

நகரத்தை அண்டிய உப அஞ்சலக அதிபர் இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து பின்னர் தற்பொழுது திரும்பியுள்ளார். இவருக்கு வேலை நீக்க அறிவித்தல் கொடுக்கப்பட்டு புதியவர் ஒருவர் உப அஞ்சலதிபராக நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார். சம்பந்தப்பட்ட உப அஞ்சல் அலுவலகத்தில் புதிதாக நியமனம் பெற்றவர் உயரதிகாரி ஒருவரின் உறவினர் என்று அறியப்படுகிறது.

இங்கே கவனிக்கப்பட வேண்டியதுஎன்ன வெனில், வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபரின் எல்லைக்குள் பல உப அஞ்சல் அதிபர் வெற்றிடங்கள் பல காலமாக நிரப்பப்படாமல் உள்ளன. அவற்றுக்கான தேர்வுகள் நடத்தும் நியமனங்கள் வழங்கப்படவில்லை. ஆனால் இடம்பெயர்ந்த ஒருவரின் இடத்திற்கு அவர் திரும்பி வந்த பின்பும் வேலை வழங்காது புதியவருக்கு நிரந்தர நியமனம் வழங்கியதில் என்ன நியாயம் உண்டு?

இந்த ஒரே காரணத்தினால் இடம்பெயர்ந்து, மீண்டும் வந்த பலருக்கு வேலை வழங்காமல் யாழ்ப்பாண அஞ்சல் பகுதி இழுத்தடிப்புச் செய்து வருகின்றது.

வேலை இல்லாது பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவது யார்?

மா. திருவாதவூரன்

திருநெல்வேலி கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கல்விச் சீர்திருத்தம்

கல்வி உயர் கல்வி அமைச்சர், புதிய கல்விச் சீர்திருத்தம் குறித்து விசேட அறிக்கை ஒன்றைக் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

உத்தேச புதிய கல்வித் திட்டத்தில் குறிப்பிடத்தக்க கணிசமான அளவு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

ஆரம்ப பாடசாலைகளை அபிவிருத்தி செய்து ஆரம்பக் கல்வி ஒரு மாணவனின் அறிவு வளர்ச்சிக்கு ஊற்றுக் காலாக அமையும் விதத்தில் மாற்றங்கள் வரவுள்ளன.

இடை நிலைக் கல்வி மட்டத்தில் தொழில் நுட்பக் கல்விக்கும், தொழில் திறன் அபிவிருத்திக்கும் முக்கிய இடம் அளிக்கும் வகையில் பாடவிதானங்கள் அமையவுள்ளன. நாட்டின் வளங்களையும், சேவைகளையும், கருவிகள் இயந்திரங்களையும் தக்கவாறு பயன்படுத்தவும், கையாளவும் தெரிந்தவர்களாக மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதாகவும் இடைநிலைக் கல்வி அமையுமாம்.

தொழில் நுட்பம் மற்றும் கைத்தொழில் துறைகளில் உயர்கல்வி பெறுவதற்கு அத்திவாரமாக ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பு மாணவருக்கும் புதிதாகத் தொழில் நுட்பப் பயிற்சிப் பாடவிதானம் அறிமுகப்படுத்தப்படும்.

மாணவருக்கு ஏட்டுக் கல்வியை மட்டும் புகட்டாமல், தொழில் திறன், தொழில் நுட்பத் திறன், தொழிற் பயிற்சி, வாழ்க்கைத் திறன் பயிற்சி என்பன புகட்டப்பட வேண்டும் என்ற குரல் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னரே எழுந்தது. அதற்கேற்ற வகையில் கல்விக் கொள்கை, கல்வித் திட்டம், பாட விதானம், பரீட்சை முறை என்பன மாற்றப்பட வேண்டும் என்ற சிபார்சுகளும், ஆலோசனைகளும் கூட அப்போதிருந்தே முன்வைக்கப்பட்டன.

ஆனால் செயலளவில் எந்த வித ஆக்க பூர்வமான பெறுபேறுகளும் இதுவரை பெரிய அளவில் எட்டப்படவில்லை. தொழில் நுட்பக் கல்வி-போதனை குறித்து பல ஆண்டுகளுக்கு முன்னரே வலியுறுத்தப்பட்டது. ஆனால் நடைமுறையில், கைக்கு வந்தது கணிசமான அளவிலேனும் இல்லை.

அரசுகள் மாறும் போது, அமைச்சர்கள் மாறும்போது, கல்விக் கொள்கைகள், கல்வித் திட்டங்கள் மாறும் ஒவ்வாத நிலை இந்த நாட்டில் நீடிப்பதே இத்தகைய நிலைக்குக் காரணம்.

கால ஓட்டத்துக்கும், வளர்ச்சிக்கும் ஏற்ப கல்வி முறையில் மாற்றங்கள் வர வேண்டும். ஆனால் ஆட்சியும் ஆளும் மாறும் போது அவரவர் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பக் கல்வி முறை மாற்றப்படக்கூடாது: தேசிய நலனுக்கே முதலிடம் வழங்கப்பட வேண்டும்.

கல்விக் கொள்கைகளை வகுக்கவும், கல்வி முறைகளை மேற்பார்வை செய்யவும், நடைமுறைப்படுத்தவும் நிரந்தரமான தேசிய கல்விச் சீர்திருத்த ஆணைக்குழு ஒன்று இயங்க வேண்டும். கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட மூத்த கல்விமான்கள் அங்கிருந்து வழிகாட்ட வேண்டும்.

அத்தகைய சபை ஒன்றினாலேயே நாட்டு நலன் கருதிய, அதன் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் உகந்த கல்வி முறையை வகுக்க முடியும்,

---

### ஜனாதிபதியின் பணிப்புரையை அடுத்து

# யாழ். குடாவில் வீடுகளைத் திருத்த ஒதுக்கப்பட்ட நிதி கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். குடாநாட்டில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நிதி இன்னமும் ஒதுக்கப்படாததால் அவற்றை வழங்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்குரிய கொடுப்பனவுகளை வழங்க 47 கோடி 80 லட்சம் ரூபாவை வழங்குமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்த போதும் அந்த நிதி இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது.

வடபகுதியில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பமாவதற்கு முன்னர் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என்று யாழ். அரச அதிபர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

கடந்த ஆண்டு மே மாதம் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு ஒன்றின்படி யாழ். மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 323 வீடுகள் இருந்தன என்றும் அவற்றில் 80 சதவீதமான வீடுகள் இராணுவ நடவடிக்கை காரணமாகச் சேதமடைந்துள்ளன என்றும் தெரியவந்துள்ளது. (ஐ)

---

## பொது கிணறுகள் ஆழமாக்க நடவடிக்கை

சண்டிலிப்பாய் ஜூலை 29

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மூன்று பொதுக் கிணறுகள் ஆழமாக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

சண்டிலிப்பாய் வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள பொதுக்கிணறு -

ஆனைக்கோட்டை பிரதேச சபை உப அலுவலகத்திற்குப் பக்கத்திலுள்ள பொதுக்கிணறுகள் —

முள்ளி கரைப் பிரான் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள பொதுக் கிணறு -

ஆகியவையே ஆழமாக்கப்பட்டு புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

இவ் வருட பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி ஒதுக்கீட்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ - 135)

## மோசமான வீதி

சண்டிலிப்பாய், ஜூலை 29

சண்டிலிப்பாய் சந்தியிலிருந்து மானிப்பாய் வரை செல்லும் பிரதான வீதி நீண்டகாலமாக குண்டும் குழியுமாக இருந்து வருகிறது. (இ-135)

---

# சிகரெட் வானில் இருந்த ரூ. 27லட்சம் பணத்தை கொள்ளையிட முயற்சி!

### கீழே விழுந்த சகாவையும் சுட்டுவிட்டுத் தப்பினார்

கொழும்பு, ஜூலை 29

அத்திரிகிய நகரில் சிகரெட் விநியோக வான் ஒன்றில் கொள்ளை அடிப்பதற்கு மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் சென்ற 3 பேர் இந்தக் கொள்ளையை நடத்த முயன்றனர்.

கொள்ளையர்கள் வானில் இருந்து பணத்தை எடுப்பதற்கு முயற்சி செய்த சமயம் அப்பகுதி மக்கள் அவர்களைத் தாக்கினார்கள்.

கொள்ளையர்கள் தப்பிச் செல்ல முயன்ற போது அவர்களில் ஒருவர் கீழே விழுந்து விட்டார். மற்றைய இரண்டு பேர் அவரைச் சுட்டுவிட்டு ஓடிவிட்டார்கள்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் பின்னர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார். கொள்ளையரின் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக ஒரு பொலீஸ் அதிகாரி சாயமடைந்தார்.

இந்த வானில் இருந்த வர்த்தகரிடம் சுமார் 27 லட்சம் ரூபா இருந்தது. (இ-4)

## ஜே.426

### அ. அட்டை

செம்பியன்பற்று, ஜூலை 29

வடமராட்சிகிழக்குப் பகுதி (ஜே-426) கிராம சேவகர் பிரிவுக்குட்பட்டோருக்கான விசேட அடையாள அட்டைகள் இன்று செவ்வாய்க்கிழமை வல்லிபுரக்கோயில் சிவில் நிர்வாக அலுவலகத்தில் காலை 9 மணிமுதல் 12 மணிவரை வழங்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது. (இ-36)

## யாழ். மதகுரு மன்னாரில் கைது

கொழும்பு, ஜூலை 29

யாழ்ப்பாணத்தில் இருந்து கடந்த இருவாரங்களுக்கு முன்னர் மன்னார் பகுதிக்குச் சென்ற கிறீஸ்தவ மதகுரு ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலீஸாரால்கைதுசெய்யப்பட்டிருப்பதாகக் கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

அந்த மதகுரு இரண்டு அடையாள அட்டைகளை வைத்திருந்தார் என்றும்- அவற்றில் ஒன்றில் கண்டிப் பகுதியைச் சேர்ந்த முகவரியும்மற்றையதில்யாழ்ப்பாண முகவரியும் காணப்பட்டதை அடுத்தே சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. (ஐ)

## சேவை நலன் பாராட்டு விழா

வலிகாமம், தெற்கு ஜூலை 29

சங்கானைக் கல்விக் கோட்டத்தில் கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற அதிபர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை பகல் ஒரு மணிக்கு சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் நடைபெறும். (இ-152)

## தபால் தலை கண்காட்சி

சாவகச்சேரி, ஜூலை 29

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நாளை புதன்கிழமை காலை 8-30 மணி முதல் பிற்பகல் 3-30 மணிவரை தபால் தலைக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

கண்காட்சியில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சிக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. கைலைநாதன் கலந்து கொள்வார். (இ-31)

## சிறுவர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 29

காரைநகர் சிவகௌரி சனசமூக நிலையமும், சிவகௌரி நல்லொழுக்க சங்கமும் இணைந்து நடத்தும் வருடாந்த சிறுவர் விளையாட்டு நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு க. கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஜூலை 29

யாழ். கோட்டை அருள்மிகு ஸ்ரீமுனீஸ்வரன் ஆலயத்தின் வருடாந்த உற்சவ மணவாளக்கோலத் திருவிழா பூர்த்தி இன்று விசேட அபிஷேகம். பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நிறைவு பெறும். (இ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை 29

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான அம்மன் ஆலயங்களிலும், அம்மன் விக்கிரகம் உள்ள ஆலயங்களிலும் இன்று ஆடிச்செவ்வாய் வழிபாடுகள் நடைபெறும். (இ-30)

★ ★ ★

கொழும்புத்துறை ஜூலை 29

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயிலில் இன்று செவ்வாய்க்கிழமை ''வள்ளியம்மை திருக்கல்யாணம்'' படிப்பு, பந்தற்கால் நடுதல் நிகழ்வுகள் காலை இடம் பெறும்; [illegible]

## நாளை

**ஆடி 14**

புதன்கிழமை

திதி: ஏகாதசி நண்பகல் 12.30 வரை.

நட்சத்திரம்: ரோகிணி முற்பகல் 9.22 வரை.

சுபநேரம்: 4 33-6.03

ராகுகாலம்: 12.03-1 33

[illegible]

---

# வவுணதீவு கட்டைக்காடு பாலம் இரண்டாவது முறை தகர்ப்பு!

மட்டக்களப்பு வவுணதீவுப் பகுதியில் உள்ள கட்டைக் காடு பாலம் கடந்த 25 ஆம் திகதி விடுதலைப் புலிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டிருக்கிறது.

பாலம் தகர்க்கப்பட்ட சத்தம் 6 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மட்டக்களப்பு நகரை உலுக்கியது.

கடந்த மார்ச் மாதம் வவுணதீவு முகாம் தாக்கப்பட்ட மறுநாள் இப்பாலமும் விடுதலைப் புலிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. தகர்க்கப்பட்ட பாலம் பின்னர் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது. (ஐ)

# சித்தாண்டி மோதலில் 32 புலிகள் மரணம்

மட்டக்களப்பு சித்தாண்டிப் பகுதியில் கடந்த 21 ஆம் திகதி எதிர்பாராத விதமாக இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் தமது தரப்பில் 32புலிகள் மரணமடைந்ததாக ''புலிகளின் குரல்'' வானொலி கடந்த வியாழனன்று அறிவித்தது.

இச் சம்பவத்தில் படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், 6 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

புலிகள் தரப்பில் கொல்லப்பட்டவர்களில் மேஜர் தரத்தில் உள்ள ஒருவரும், லெப்டினன்ட் ஒருவரும், கப்டன் தரத்தில் உள்ள மூவரும், 2 ஆம் லெப்டினன்ட் தரத்தில் உள்ள நால்வரும் அடங்குவர்

அவர்களில் சிலரது விவரங்கள் வருமாறு:-

மேஜர் ஜெயநீதன் (வடிவேல் நிமலன் — மட்டக்களப்பு), கப்டன் கார்முகிலன் (வெள்ளைச்சாமி கர்ணன்— அம்பாறை), கப்டன் புலேந்திரன் (வடிவேலு சுந்தரலிங்கம் —அம்பாறை), கப்டன் நேரு (தம்பிரட்ணம் ஜெயாபரன் —அம்பாறை), லெப்டினன்ட் வன்னி (சின்னத்தம்பி புஸ்பராசா—மட்டக்களப்பு), 2 ஆம் லெப்டினன்களான சுந்தரன் (சின்னத்தம்பி தங்கேஸ்வரன் —மட்டக்களப்பு), பாஸ்கரன் (பொன்னுத்துரை கனகரத்தினம் — மட்டக்களப்பு), மளவன் (சிவகுரு ராஜன் — மட்டக்களப்பு), கனககுமார் (குழந்தைவேல் திருவசந்தன் —மட்டக்களப்பு) உட்பட 32 புலிகள் உறுப்பினர்களுடைய பெயர் விவரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இறந்தவர்களில் 26 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எஞ்சியோர் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களென்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம் — காங்கேசன்துறை வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்தவரும், மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவருமான, பாலசுப்பிரமணியக்குருக்கள் ஸ்ரீஸ்காந்தராசா சர்மா (வயது 16) உடுப்பிட்டியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியக் குருக்கள் - பால சதீஷ் சர்மா (வயது 20) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். காயமடைந்தவர்கள் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-15)

## விவசாயக் கூலிகளுக்கு உதவி

வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் இருக்கும் விவசாயக் கூலிக் குடும்பங்களுக்கு இலவசமாக மண்வெட்டியும் விதை தானியங்களும் வழங்கப்பட உள்ளன.

விவசாய கூலிகளாக பிரதான தொழில் செய்யும் குடும்பங்களின் பெயர்விவரங்களை தம்மிடம் சமர்ப்பிக்குமாறு வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் இப்பகுதியைச் சேர்ந்த 25கிராம உத்தியோகத்தர்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை, நடன ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்புவது தற்காலிகமாக நிறுத்தம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் இசை, நடன ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா பணிப்புரை விடுத்துள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பயின்ற இசை நடனத்துறையில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதை அடுத்தே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய நிறுவனங்களில் பயின்றவர்களுக்கு நியமனம் வழங்கும் அதிகாரம் 13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு இல்லாமையே இத்தகைய நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளமைக்குக் காரணமாகும்.

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை பகிரங்க சேவை ஆணைக்குழு கோரியிருந்தது இதனையே தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளாரென தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்றஉறுப்பினர் பொ. செல்வராசா தெரிவித்துள்ளார்.

இந்த நிபந்தனையின் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியில் சான்றிதழ் பெற்றவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இதுவிடயமாகப் பூரணமாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் வரை இசை நடன ஆசிரியர் நியமனம் தொடர்பான நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு ஆளுநர் கட்டளை பிறப்பித்துள்ளதாக பொ. செல்வராசா எம். பி. தெரிவித்தார். (ஐ)

## நம்பிக்கை வாக்கெடுப்பில் லாலுவின் மனைவி தப்பினார்!

பட்னா, ஜூலை 29

பீஹார் சட்ட சபையில் நேற்று நடைபெற்ற நம்பிக்கைத் தீர்மானத்தில் ராப்ரி தேவி தலைமையிலான அரசு வெற்றியீட்டியதாக அறிவிக்கப்படுகின்றது.

முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவ் இராஜினாமாச் செய்ததை அடுத்து அவரது மனைவி ராப்ரிதேவி புதிய முதல்வராகப் பதவியேற்றது தெரிந்ததே.

நம்பிக்கை வாக்கெடுப்பின் போது 325 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் பிரேரணைக்கு ஆதரவாக 194 பேரும் எதிராக 110 பேரும் வாக்களித்ததாக சபாநாயகர் அறிவித்தார்.

லாலு பிரசாத் யாதவின் ராஷ்டிரிய ஜனதா தள் கட்சியின் 136 உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சியின் 29 உறுப்பினர்கள், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் நான்கு பிரிவுகளையும் சேர்ந்த 20 உறுப்பினர்கள் மற்றும் 14 சுயேச்சைகளில் பெரும்பான்மையோர் ராப்ரிதேவி அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

பாரதீய ஜனதாக் கட்சியின் 43 உறுப்பினர்கள், இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த 32 உறுப்பினர்கள், ஜனதா தள் கட்சியின் 29 உறுப்பினர்கள், சமதாக் கட்சியின் 8 உறுப்பினர்கள் ஆகியோர் எதிர்த்து வாக்களித்தனர்.

நம்பிக்கைத் தீர்மானத்தின் மீதான விவாதத்துக்குப் பதிலளித்து முதல்வர் ராப்ரிதேவி நான்கே நான்கு வார்த்தைகளே பேசினார்.

தனது அரசுக்கு ஆதரவு வழங்கும்படி அவர் எதிர்க்கட்சிகளைப் பார்த்துக் கோரினார். (முன்னர் வந்த செய்தி 3ஆம் பக்கத்தில்)

## சங்கானைப் பகுதி முகாம்கள் மிகவும் மோசமான நிலையில்

யாழ்ப்பாணம், ஜூலை 29

சங்கானை பிரதேச செயலரின் கீழ் இயங்கும் சங்கானைப் பகுதியிலுள்ள சில முகாம்கள் மக்கள் குடியிருக்க முடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சங்கானையில் உள்ள நான்கு முகாம்களிலுள்ள சுமார் 150 வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும்,

இதுபற்றி பல தடவைகள் கிராமசேவையாளர், பிரதேச செயலர் ஆகியோருடன் தொடர்பு கொண்டும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லைஎன்றும் கூறப்படுகிறது. (இ-15)

## பிற மாவட்ட பரீட்சார்த்திகள் இங்கேயே பரீட்சை எழுத வசதி

யாழ்ப்பாணம், ஜூலை 29

ஆசிரியர் சேவை வகுப்பு 1 இற்கு தரம் உயர்த்துவதற்கான பரீட்சைக்கு விண்ணப்பித்தோரில் பிற மாவட்டங்களில் பரீட்சை நிலையம் ஒதுக்கப்பட்டோர் யாழ்ப்பாணத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வசதி செய்யப்பட்டிருப்பதாக யாழ். வலயம் -1 கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா அறிவித்துள்ளார்.

இதேவேளை —

பிற மாவட்டங்களிலிருந்து இங்கு திரும்பி வந்துள்ள மாணவர்கள் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும்—

பிற மாவட்டங்களிலிருந்து வந்துள்ள மாணவர்களின் பெயர் விவரங்களை அதிபர்கள் நாளை புதன்கிழமைக்கு முன்னர் வலயக்கல்விப்பணிப்பாளர்களிடம் ஒப்படைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மத்திய கல்லூரி நிறுவுநர் நாள் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். மத்திய கல்லூரியின் 181 ஆவது நிறுவுனர் நாள் விழா எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் தபால் தலை முதல் நாள் உறை என்பனவும், 180 ஆவது ஆண்டு நிறைவு மலரும் வெளியிடப்படும்.

விழாவில் பிரதம விருந்தினராகப் பேராசிரியர் வ. நவரட்ணராஜா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக வலயம் I கல்விப்பணிப்பாளர் சு. இரத்தினராசா கலந்து கொள்வார்.

180 ஆவது ஆண்டு நிறைவு விழா நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வழங்குவார். (ஐ)

## அரியாலை விவசாயிகளுக்கு விதை நெல்

அரியாலைக்கு உட்பட்ட எல்லைக்குள் வயல் செய்யும் விவசாயிகள் காலபோக விதைநெல் தேவைப்படின் நாளை புதன்கிழமைக்கு முன் தங்கள் விவரங்களைப் பதிவு செய்யும்படி அரியாலை விவசாயிகள் சம்மேளனம் கேட்டுள்ளது.

மேற்படி சம்மேளனத்தின் அங்கத்தவர்களுக்கே விதை நெல் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளதால் வயல் செய்யும் விவசாயிகளும், மேட்டு நிலப் பயிர் செய்பவர்களும் மேற்படி சம்மேளனத்தில் அங்கத்தவராகும் படி அரியாலை விவசாயிகள் சம்மேளன செயலாளர் ஆ. சண்முகநாதன் தெரிவித்துள்ளார். (இ-4)

## பேச்சுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்)

முறையையோ, சமிக்ஞையையோ புலிகளின் தலைவர் பிரபாகரன் வெளிக்காட்டவில்லை.

ஆனால் புலிகள் சார்பில் பேச முன்வருவதாகக் கூறிக்கொண்டு பலர் பேச்சுவார்த்தைக்கான சமாதான சமிக்ஞைகளைக் காட்டிக்கொண்டு வருகின்றார்கள். அவற்றில் எல்லாம் நம்பிக்கைத்தன்மை இருப்பதாக அரசு ஒருபோதும் கருதவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வே. பிரபாகரனின் முழுக் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. எனவே சர்ச்சைக்குரிய வகையில் அல்லாமல் சமாதானப் பேச்சுக்கான சமிக்ஞைகள் அவரிடம் இருந்தே வெளிவரவேண்டும். அப்படி வராத பட்சத்தில் அரசு பேச்சு முயற்சிகள் எதிலும் ஈடுபடமாட்டாது.

யாழ்ப்பாணத்துக்குத் தரைப் பாதையைத் திறக்கும் முயற்சியில் ஸ்ரீலங்கா இராணுவம் முனைப்புடனேயே ஈடுபட்டுள்ளது. ஒரு கட்டத்தில் புலிகளின் கடுமையான எதிர்ப்பு இருந்தது உண்மைதான்.

ஆனால் தரைப் பாதையைத் திறப்பதில் அரசு மிக உறுதியாகவே உள்ளது.

சமாதானப் பேச்சுக்கான கதவு திறந்தே உள்ளது. அதேசமயம் பாதையைத் திறக்கும் நடவடிக்கைகளிலும் அரசு முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

உரிய நேரத்தில் சரியான நடவடிக்கையை முன்னெடுத்து கிளிநொச்சிக்கு தரைப் பாதை திறக்கப்படும்.

அதற்குக் கடும் எதிர்ப்புக் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசுத் தலைவர்கள் மீது தாக்குதல் நடக்கும் அபாயமும் உள்ளது.

எது எப்படி என்றாலும் இலங்கை இராணுவம் தனது இலக்கை அடைந்தே தீரும்.—என்றார்.

# கல்விச் சீரமைப்புக்கு எதிராக தெற்கில் சுவரொட்டிகள்

## பல்கலை. மாணவர் பெயரில் பிரசுரம்

கொழும்பு, ஜூலை 29

அரசாங்கத்தின் உத்தேச கல்வி மறுசீரமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ற பெயரில் தென்பகுதி பாடசாலைகளில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கல்விச் சீர்திருத்தக் கொள்கையை எதிர்க்கும் சுவரொட்டிகள் சில பாடசாலைகளில் ஒட்டப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஆசிரியர்கள், மாணவர்கள் தவிர்ந்த அதிகாரம் வழங்கப்படாத வேறு எந்த நபர்களையும் பாடசாலைகளின் உள்ளேயும், வகுப்பறைகளின் உள்ளேயும் அனுமதிக்க வேண்டாம் என்று கல்வி, உயர்கல்வி அமைச்சு அதிபர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளது. (ஐ)

## ரெலோவின் முடிவு

கொழும்பு, ஜூலை 29

ஐந்து தமிழ் அரசியல் கட்சிக் கூட்டணியில் இருந்து வெளியேறுவது குறித்து ரெலோ அமைப்பு நேற்று இறுதி முடிவு எடுப்பதாக இருந்தது. ஆனால் இவ்விடயம் குறித்து நேற்று முடிவு எடுக்கப்படவில்லை என்றும் இது தொடர்பாக நாளை மறுதினம் வியாழன்று முடிவு எடுக்கப்படவுள்ளதாகவும் ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம் என். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ஐ-10)

## அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்)

நிறுத்தப்பட வேண்டும். விடுதலைப் புலிகள் கலந்துகொள்ளாத எந்தவொரு தீர்வும் தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வாக அமையாது.

யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப் பாதையைதிறக்கவென இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையால் சுமார் 2 லட்சம் மக்கள்இடம் பெயர்ந்து முல்லைத்தீவு காட்டுப் பகுதியில் தங்கியுள்ளனர். ஆனால் அவர்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை உரிய முறையில் வழங்க அரசு தவறியுள்ளது. இவ்வாறு ஜோசெப் பரராஜசிங்கம் மேற்படி சந்திப்பின்போது தெரிவித்தார் எனக் கூறப்பட்டது. (உ-10-21)

## எதிர்ப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

சாரங்களை மாணவர் மத்தியில் பரப்பி குழப்பத்தை ஏற்படுத்த சில சக்திகள் முயற்சித்து வருவதாகக்கல்வி உயர் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இந்திய ..

(முதலாம் பக்கத் தொடர்)

துப் போயிருக்கிறார்கள், மீனவர்கள் மீதான தாக்குதல்களை உடனே நிறுத்தும்படி இலங்கை அரசை எச்சரிக்கின்றோம்'' என ஆர்ப்பாட்டப் பேரணிக்குத் தலைமை வகித்த ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டத்தின் போது அசம்பாவிதங்கள் எதுவும் நடக்காதபடி இலங்கைத் தூதரகத்தைச் சுற்றி பலத்த பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இம்மாதம் 14 ஆம் திகதி இரண்டு தமிழக மீனவர்களும் 17 ஆம் திகதி மேலும் இரு தமிழக மீனவர்களும் பாக்கு நீரிணையில் இந்தியக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இலங்கைக் கடற்படை மற்றும் ஹெலிக்கொப்டர்களால் கொல்லப்பட்டனர் என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டது.

தமிழக மீனவர்களின் படுகொலை குறித்து இந்தியா உத்தியோக பூர்வமாக தனது அதிருப்தியையும் கண்டனத்தையும் கடந்த வாரம் இலங்கை அரசுக்குத் தெரிவித்திருந்தது.

தமிழக அரசியலில் எதிரும் புதிருமாக இருந்த அ. தி. மு. க., ம. தி. மு. க. மற்றும் சுப்பிரமணியசுவாமியின் ஜனதாக் கட்சி ஆகியவை ஆளும் தி. மு. கவுக்கு எதிராக ஓரணியில் இணைந்த பின்னர் அக்கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்து நடத்திய போராட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் ஒரு மணி நேரம் மறியல் போராட்டம் நடத்திய பின்னர் கட்சித் தலைவர்கள் இலங்கைத் துணைத் தூதரகத்துக்குள் சென்று துணைத் தூதரிடம் மனு ஒன்றைக் கையளித்தனர்.

இந்திய மீனவர்கள் இலங்கைப் படையினரால் சுட்டுக் கொல்லப்படுவது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதல்வர் மு. கருணாநிதி மத்திய அரசை வற்புறுத்தி வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-ஐ-10)

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

இதேவேளை கடலில்சேவையில் ஈடுபடுவதற்கான உத்தரவாதத்தை வழங்கும் ஆவணங்களும் அக்கப்பலுக்கு இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கப்பல் சேவை ஆரம்பிக்கப்படுமா என்பது குறித்து''குட்வில் கைட்'' கப்பலின் கம்பனியுடன் தொடர்பு கொண்டு கேட்டதற்கு கப்பலைத் திருத்திப் பயணிகள் சேவையை நடத்த தமக்கு அனுமதி தரப்பட்டால் உடனடியாகவே சேவையை ஆரம்பிக்கத் தாங்கள் தயாராக இருப்பதாகத் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கப்பல் சேவை மீண்டும் எப்போது ஆரம்பமாகும் என்பது தெரியாத நிலையில் கடந்த பல நாள்களாக அங்கு தவம் கிடக்கும் பயணிகள் விரக்தி நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-உ-150)

## மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த 14 ஆம் திகதி நெடுந்தீவுக்கு அருகிலும் 17 ஆம் திகதி இந்தியக் கடற் பகுதியிலும் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்ட மீனவர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சு நடத்திய விசாரணை அறிக்கையையும் இவ்விரு தாக்குதல் சம்பவங்களிலும் இலங்கைப் படையினர் தொடர்புபடாததை நிரூபிக்கும் ஆவணங்களையும் அமைச்சர் கதிர்காமர் இந்தியத் தூதரின் பார்வைக்குக் காட்டினார் என இலங்கைத்தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இலங்கை — இந்திய ஒப்பந்த ஆண்டு நிறைவு காலத்தில் அதற்கு ஊறு விளைவிக்கும் நோக்கில் விடுதலைப் புலிகளே இக்கொலைகளை மேற்கொள்வதாக அமைச்சர் கதிர்காமர் குற்றஞ் சுமத்தினார் என்று மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-ஐ-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 29-07-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org